
அருளோசை

திருவள்ளுவர் ஆண்டு 2006
சித்திரை
1975 ஏப்ரல்

சமய பாட போதனைத் திங்களிதழ்



பேரவைக் கிளைச்சங்கங்கள் கவனத்துக்கு

இதுதான் பேரவையின் கொடிச் சின்னம். இதையே கிளைச் சங்கங்கள் பயன்படுத்த வேண்டும். நாகர்கோயிலில் நடைபெற இருக்கும் மாநில மாநாட்டிற்கு வரும் பேராளர்கள் இம்மாதிரிச் சின்னத்துடன் கொடிகள் தயாரித்துக் கொண்டு வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தமிழ்நாடு தெய்விகப் பேரவை

9, மகாராஜா சூரியராவ் சாலை,
சென்னை-600 018

ஆண்டுச் சந்தா ரூ .5]
[தொலைபேசி : 76828

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

பழனி ஞான தண்டாயுதபாணியைப் பணிந்திட வாரீர் !
அழகான திருமுருகன் அருள் பெறவே திரண்டு வாரீர் !
செந்தேனும் பாலும் மணக்கும் சேயோனை வழிபட வாரீர் !
சந்தன விபூதி மணக்கும் திருமேனி கண்டு மகிழ வாரீர் !

முடிக்காணிக்கை தரத் தனியிடம் !
தங்குவதற்கேற்ற வசதிகள் !
முதியவரும் முடியாதோரும் முருகன் அருகே செல்ல
இழுவை ரயில் வசதி !
பொங்கியெழும் பேரழகனைத் தாங்கிவரும் தங்கரதம்
காண வசதிகள் !

அத்தனையும் செய்து அழைக்கிறது பழனித் திருக்கோயில். தமிழ்க்கடவுளாம் கந்தப்பெருமானின் அருள்பெற்று, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் கண்காணிப்பில் கீழே கண்ட நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

1. அருள்மிகு பழனியாண்டவர் கலைக்கல்லூரி
2. அருள்மிகு பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி
3. அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி
4. அருள்மிகு பழனியாண்டவர் செந்தமிழ்க் கல்லூரி
5. கார்த்திக்பள்ளி (ஆங்கிலப்போதனை)
6. செவிடர்பள்ளி
7. நாதகாக் கல்லூரி
8. வேத ஆகமப்பாடசாலை
9. அன்புஇல்லம் (அனாதை விடுதி)
10. முதியோர் இல்லம்
11. குழந்தைகள் காப்பகம்
12. மருத்துவமனை

பழனித் திருமலையில் நாளும் பெருகிவரும் பக்தர்கட்குப் போதிய வசதிகள் செய்து தருவதற்காக 60 லட்சரூபாய் செலவில் மாபெரும் திருப்பணித் திட்டம் செயல்பட உள்ளது.

அறங்காவலர் குழு :

திரு பு. மனோகரன், தலைவர், அறங்காவலர் குழு

அறங்காவலர்கள்

திரு. வி. வி. சி. ஆர். எம். கந்தசாமி, பி.எஸ்ஸி.
திரு. என். நாச்சிமுத்து. எம்.எல்.ஏ.
திரு. புலவர் சி. பழனிச்சாமி, எம்.எல்.ஏ.
திரு. எ. பச்சையப்ப கவுண்டர்

பி. செள. கோதண்டபாணி, பி.எஸ்ஸி., பி.எல்.,
துணை ஆணையர்-நிர்வாக அதிகாரி

அருளோசை

சமய பாட போதனைத் திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

மணி 3	இராக்கத சித்திரை 1975 ஏப்ரல்	ஓசை 10

அருளோசை அன்பர்களுக்கு, வணக்கம்.

தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். பேரவையின் விருப்பத்திற்கிணங்க எல்லாக் கோயில்களிலும், கிளைச் சங்கங்களிலும் மழைவேண்டல் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடந்ததில் மாநிலத்தின் பல பகுதிகளில் மழை பெய்த செய்திகள் கிடைத்துள்ளதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். புத்தாண்டில் நல்ல காலமழை பொழிந்து, வளங்கொழித்து, மக்கள் அனைத்து நலன்களையும் பெற ஆண்டவனை வேண்டுகிறோம்.

வருகிற 20-4-75 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீராமநவமி நன்னாள் வருகிறது. அந்நாளில் இராம பஜனை செய்து, இராமநாமம் ஜெபித்து, இராமகாதை சொல்லி-கேட்டு இராமன் வழியில் நிற்போம் என்று நாம் உறுதி செய்வோமாக. அந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டியது ஒவ்வொரு இந்துவின் தலையாய கடமை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மற்றொரு முக்கியமான செய்தியையும் ஈண்டு அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். நம்முடைய தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் மாநில மாநாடு கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோயிலில் 9-5-75, 10-5-75, 11-5-75 ஆகிய மூன்று நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற இருக்கிறது. தமிழகத் திருமடங்களின் தலைவர்களும் அமைச்சர்களும், அறிஞர்களும் பங்கு கொள்கின்றனர். இந்து சமூக நல மாநாடு, மகளிர் மாநாடு, இளைஞர் மாநாடு, திருமுறை-திவ்வியப் பிரபந்த மாநாடு, பட்டிமன்றம், கிளைச்சங்கங்களின் பேராளர் கூட்டம்

மாபெரும் ஊர்வலம், கலைநிகழ்ச்சிகள் முதலியன மாநாட்டில் இடம் பெறுகின்றன. இந்துசமயம், சமுதாயம் இவற்றிற்கு எழுச்சியூட்டும் வகையில் அந்த மாநாடு சிறப்புற அமைய யாவரும் துணை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

இந்த இதழில்

கதை, கட்டுரைகளில் வரும் கருத்துக்களுக்கு, அவற்றை எழுதியவர்களே பொறுப்பு.

" அருளோசை "

வினா விடைப் பகுதி-பிப்ரவரி-75

பரிசு பெற்றவர்கள்

முதல் பரிசு: மு. பிச்சை, ப. கொடிக்குளம் (அஞ்சல்), இராமநாதபுரம், சந்தா எண் 3589

இரண்டாம் பரிசு: திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ., கூத்தாநல்லூர், தஞ்சை மாவட்டம், சந்தா எண். 3145

மூன்றாம் பரிசு: திரு. வே. அரங்கசாமி, அதிகாரப்பட்டி, தர்மபுரி மாவட்டம், சந்தா எண் 2725


நான்காம் பரிசு: திரு. மீ. சீனிவாசன், திருவாடானை, 623707 இராமநாதபுரம், சந்தா எண் 1837

மழைவேண்டல் வழிபாடு!

வங்கக் கடற்கரையில்


மக்கள் பெருவெள்ளம்!

மகாசந்நிதானங்கள் எழுந்தருளினர்! கட்சி, இன வேறுபாடற்ற முறையில் இலட்சக்கணக்கானோர் கலந்து கொண்டனர்!



திருமுறை, திவ்வியப்பிரபந்தம் திருமறைகள் முழங்கின! வேள்வியும் நடைபெற்றது!

காலமழை பொய்த்ததால் ஏற்பட்டிருக்கும் வறட்சிநிலை நீங்கி, வான் மழை பொழிந்து வளம் பெருக வேண்டி, சென்னை நகரிலுள்ள அனைத்து இந்து சமய அமைப்புக்களின் சார்பிலும் தமிழ்நாடு தெய்விகப் பேரவை ஏற்பாடு செய்திருந்த மழைவேண்டல் வழிபாடு சென்ற 23-3-75 அன்று மாலை 5-30 மணி அளவில் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் சிறப்பாக நடந்தேறியது. இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.




ஆலோசனைக் கூட்டம் :

பேரவையில் இணைந்துள்ள சுமார் 2500 சங்கங்களின் சார்பிலும் கடந்த 4 மாதங்களாக, ஆங்காங்குள்ள சங்கங்கள், பேரவைத் தலைவர் தவத்திரு அடிகளார் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, எல்லா ஊர்களிலும் மழைவேண்டல் வழிபாடுகள் நிகழ்த்தி அநேகமாகச் சென்னை நகர் தவிர எல்லா ஊர்களிலும் மழை பொழிந்த செய்தியை நமது 'செய்திக்கதிர்' வாயிலாகவும் பிற இதழ்கள் வாயிலாகவும் நீங்கள் அறிந்திருப்பீர்கள் !

சென்னை நகரிலுள்ள அனைத்து இந்து சமயச்சார்பு இயக்கங்களின் சார்பிலும், இந்து சமூக மக்கள் அனைவரையும் திரட்டி, திருவல்லிக் கேணிக் கடற்கரையில் வழிபாடு ஒன்று நிகழ்த்தப் பேரவைத் தலைவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் திருவுள்ளம் கொண்டனர். உடனே எல்லா அமைப்புகளுக்கும் அழைப்பு விடுத்து, 5-3-75 அன்று ஓர் ஆலோசனைக் கூட்டமும் 15-3-75 அன்று ஓர் ஆலோசனைக் கூட்டமும் நடைபெற்றன. 20 3-75, 22-3-75 ஆகிய நாட்களில் செயல் முறையாளர் (workers) கூட்டங்களும் நிகழ்ந்தன.

அன்பர்கள் அளித்த உறுதி

முன்னாள் மேயர் திரு. கே. கமலக்கண்ணன், சைவசித்தாந்த மகா சமாசம் சார்பில் திரு. கொ. நீ. சிங்காரவேலு, விசுவஹிந்து பரிஷத் சார்பில் திரு. வேதாந்தம் திரு. பகவான், இந்து தனியார் பள்ளித் தாளாளர் பேரவை சார்பில் திரு. ஏ. ஜி. சுப்பிரமணியம், திரு. ஆர். ஆர். அய்யர், வர்த்தகர்கள் சங்க சார்பில் திரு. சூரியநாராயணன், பேரவைக் கிளைகளின் சார்பில் திருவாளர்கள் சத்தியநாராயணன், வேங்கடவரதன், முருகேசன், டி. பாஷ்யம், ஏ. எல். சுப்பிரமணியம், குப்புசாமி, வேணுகோபால், சிதம்பரம் மீனாட்சிசுந்தரம், மாதர் சங்கங்களின் சார்பில் திருமதி சரோஜினி சுப்பிரமணியம், நாகலட்சுமியம்மாள், ருக்மணி அம்மாள் ஆகியோர் ஆலோசனைக் கூட்டங்களில் கலந்து கொண்டு, மக்களைப் பெருவாரியாகத் திரட்டித் தர உறுதியளித்தனர்.



சுவரொட்டிகள், விளம்பரங்கள் :

சுவரொட்டிகள் அச்சிடப்பெற்று நகரெங்கும் விளம்பரம் செய்யப் பெற்றது. துண்டுப்பிரசுரங்கள் (நோட்டீசுகள்), வேண்டுகோள்கள் ஆகியன இலட்சக்கணக்காக அச்சிடப்பெற்று விநியோகம் செய்யப் பெற்றன. அழகான விளம்பரத் தட்டிகளைத் தயார் செய்து சென்னை யிலுள்ள எல்லா சோயில்களிலும் வைக்கப்பெற்றன. தினத்தந்தி, மாலை முரசு, தமிழ்முரசு, அலைஓசை, நவமணி, நவசக்தி, மக்கள்குரல், முரசொலி, தினமணி, சுதேசமித்திரன் ஆகிய இதழ்கள் செய்திகளை விரிவாகப் பிரசுரம் செய்து துணைபுரிந்தன !

நிகழ்ச்சி முறை :

கடற்கரையில் நடைபெற இருக்கும் வழிபாட்டில் பாடப்பெறும் பாடல்கள் திருமுறை, திவ்வியப்பிரபந்தம், கந்தபுராணம், திருவிளை யாடற்புராணம் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பெற்று 75,000 பிரதி கள், நிகழ்ச்சி முறையுடன் அச்சிடப்பெற்று விநியோகம் செய்யப் பெற்றன.

வழிபாட்டு நிகழ்ச்சி :

23-3-75 காலையிலிருந்தே கடற்கரை களைகட்டத் தொடங்கியது. ஏற்பாடுகள் எவ்வித ஆடம்பரமும் இல்லாமல் எளிமையாகச் செய்யப் பெற்றன. பேரவைத் தலைவர் திருவருள்திரு மகாசந்நிதானம் அவர்கள் இருந்து ஏற்பாடுகள் செம்மையாக இருக்க அறிவுரைகள் வழங்கினர்.

மாலை 3-30 மணியளவில் வேள்வி தொடங்கியது. திருப்புகலூர் கே. எஸ். வைத்தியநாத சிவாசாரியார், குன்றக்குடி திரு. வெங்கட்டராம கனபாடிகள், திரு. கிருஷ்ணமூர்த்தி கனபாடிகள் ஆகியோர் முறைப்படி

வேள்வி செய்தனர். ஊர்க்காவல் படைத் தொண்டர்களும், சாரணர்களும், தேசிய மாணவர் படை மாணவர்களும் கடல் எனத் திரண்டு வந்த மக்களை ஒழுங்குபடுத்தி அமைதியாக அமரச்செய்தனர்.

சரியாக 5-30 மணிக்கு வழிபாடு தொடங்கியது. திருமுறைப் பண்ணிசைவாணர்கள், திருப்பனந்தாள் திரு. சுப்பிரமணிய முதலியார், திருக்களர் திரு தி. சுந்தரேச தேசிகர், லால்குடி திரு. சுவாமிநாதன் ஆகியோர் திருமுறைப் பாடல்களை மேகராகக் குறிஞ்சிப் பண்ணிலும் புலவர் திரு. புண்ணியகோடி அவர்கள் திருக்குறள் வான்சிறப்பு



பாடல்களையும், திவ்வியப்பிரபந்தப் பாடல்களைக் காஞ்சிபுரம் திரு. வெங்கடவரதன், திருமணி திரு. எல். இராஜகோபாலன், செல்வி எல். அகிலா ஆகியோரும் உளம் உருகப் பாடினர். திருவாசகப் போற்றித் திருஅகவலும், காந்தியடிகள் விரும்பிப் பாராயணம் செய்து கொண்டிருந்த "இரகுபதி ராகவ ராஜாராம்" என்ற பாடலும் திரண்டிருந்த மக்கள் அனைவராலும் ஒருசேர முழங்கப்பெற்றன.

சிவாசாரியார்கள் உணர்ச்சி வசப்பட்டு வடமொழிச் சுலோகங்களை ஓதினர்.

வேள்விச் சாலையில் எழுந்தருளச் செய்யப்பெற்றிருந்த திருக்குட நீரை திருவருள்திரு குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்கள் கடலில் கலக்கி, அதனைப் பல குடங்களாகத் திருப்பித் தரும்படி கடலரசனை வேண்டிக்கொண்டனர். பின்னர் "வான்முகில் வழாது பெய்க" பாடப் பெற்றது. திருவருள்திரு மகாசந்நிதானம் அவர்கள் "சாந்தி! அமைதி!" என்று கூறியதும் மூன்று மணித்துளிகள் அமைதி நிலவியது. அனைவரும் தத்தம் வீடுகளில் சென்று 45 நாட்களுக்குத் தொடர்ந்து வழிபாடு செய்யும்படி தவத்திரு அடிகளார் அவர்கள் வேண்டுகோள் விடுக்க வழிபாடு இனிது நிறைவேறியது.

காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள், பேரூராதீனம் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார், தருமபுரம் பிரசார நிலையம் தவத்திரு மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள், குன்னூர் தவத்திரு சற்குரு ராமசாமி அடிகள் ஆகியோர் எழுந்தருளியிருந்தனர்.

முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம், முன்னாள் அமைச்சர் திரு. ராஜாராம் நாயுடு, எம்.எல்.சி., திரு. ஜி. சுவாமிநாதன் எம்.எல்.சி. திருமதி பழனியம்மாள், எம்.எல்.ஏ., திரு. நா. மகாலிங்கம், திருமதி சௌந்தராகைலாசம் ஆகியோரும் அறநிலைய ஆட்சித்துறைத் துணை ஆணையர் திரு. கே. ராஜா, உதவி ஆணையர் திரு. பி. எஸ். கோபாலசாமி, நகை சரிபார்க்கும் அலுவலர் திரு. நடராஜன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



ஆலயப் பாதுகாப்புக் கமிட்டி, விசுவ ஹிந்து பரிஷத், சைவ சித்தாந்த மகாசமாசம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் வழிபாடு சிறப்புற நிகழப் பெரும் ஒத்துழைப்பு நல்கினர். சாரணர் இயக்க இயக்குநர் திரு. இராதாகிருஷ்ணன், திருமயிலை அருள்மிகு கபாலீச்சரர் திருக்கோயில் செயல் அலுவலர்-உதவி ஆணையர் திரு. த. நாகராசன், அருள்மிகு முண்டகக்கண்ணி அம்மன் திருக்கோயில் செயல் அலுவலர் திரு. ராஜு ஆகியோர் துணைபுரிந்தனர்.

செய்தித் தொகுப்பு: பழ-தரும-ஆறுமுகம்.

அருள்மிகு திருநீற்றீசுவரர் திருக்கோயில்
புதிய கும்மிடிப்பூண்டி, செங்கற்பட்டு மாவட்டம்
சித்திரைப் பௌர்ணமி விழா

25-4-75

காலை 6 மணி 1008 அருட்பாவிற்கு அகல்விளக்குகள் ஏற்றுதல் துவக்கம்.

இரவு 9 மணி "இசைச்செல்வன்" சிதம்பரம் எஸ். மீனாட்சிசுந்தரம் இன்னிசை

இரவு 1 மணி ஜோதி தரிசனம்

அனைவரும் வருக!

சாதுகுருதிருஞானசம்பந்த சுவாமிகள்
தலைவர்

உ

கிளைச்சங்கங்களுக்கு வேண்டுகோள்

மாநில மாநாட்டுக்குத் தீர்மானங்கள்

பேரன்புடையீர்,

தமிழ்நாடு தெய்விகப் பேரவைக் கிளைச்சங்கங்களின் மாநில மாநாடு கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் 9-5-75, 10-5-75, 11-5-75 ஆகிய தேதிகளில் நடைபெற இருக்கின்றது.

மாவட்டங்களிலுள்ள கிளைச்சங்கங்களிலிருந்து மாநில மாநாட்டுக்காக, கிடைக்கப்பெற்ற தீர்மானங்கள் இதுவரை மிகக் குறைந்த அளவு சங்கங்களிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளதால் இதுவரை தீர்மானங்கள் அனுப்பிக் கொள்ளாத கிளைச்சங்கங்கள் விரைவில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அ. நாராயணசுவாமி,
செயலாளர்.



திருவள்ளூர்

அருள்திரு வீரராகவப் பெருமாள் திருக்கோயில்

திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ்.,
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை.

முன்னுரை :

திருவள்ளூர் என்னும் சிறந்த வைணவத் தலம், சென்னைக்கு வட மேற்கில், சுமார் 40 கி. மீ. தொலைவில் உள்ளது. திருவள்ளூர் இருப்புப் பாதை நிலையத்திற்குச் சுமார் 3 கி. மீ. தொலைவில் உள்ள திருக் கோயிலில், அருள்திரு வீரராகவப் பெருமாள், கனகவல்லி (வசுமதி)த் தாயாருடன், எழுந்தருளியுள்ளார்.

இத்தலத்திற்குப் புண்ணியாவர்த்த க்ஷேத்திரம் என்றும் வீட்சார ணியம் என்றும் பெயர் வழங்கும். இங்குள்ள திருக்குளம் இருத்தாப நாசன புஷ்கரிணி என்னும் பெயர் உடையது. முன்னொரு காலத்தில் இத்திருக்குளத்தின் கரையில் தவம் புரிந்துகொண்டிருந்த சாலி கோத்திர முனிவரிடம், பெருமாள் ஒரு கிழ அந்தணர் வடிவில் வந்து தாம் படுத்து ஒய்வு கொள்ள எங்கு இடம் (உள்) உள்ளது? என வின வினர். ஆதலின் இதற்குத் திரு எவ்வுள் ஊர் என்று பெயர் ஏற்பட்டது. அதுவே நாளடைவில் மருவித் திருவள்ளூர் என வழங்கி வருகின்றது.

இத்திருக்கோயிலின் உள்ளே நுழைந்ததும், முதற்கண் நமக்குத் தெரிவது, கொடிக்கம்பம் (துவஜஸ்தம்பம்), அதனையடுத்துள்ள அரங்க மண்டபம் என்னும் மகாமண்டபத்தில், பெரிய திருவடி (கருடாழ்வார்) சந்நிதி உள்ளது. அதனைக்கடந்து சென்றால், திருவுண்ணாழிச் சுற்றுப் பிராகாரம் இருக்கிறது. அதன் சுவர்களில் தலபுராண வரலாறுகள், அழகிய ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இங்குத்தான், சிறப்பு நாட் களில் பெருமாள் திருமஞ்சன நீராட்டுக் கொள்வது வழக்கம். அதனை யடுத்து அர்த்த மண்டபம் உள்ளது. இதனை மஞ்சக்கட்டு என்பர். இதன் கண் மிகமிக அற்புதமான அழகிய தெய்வத்திருவுருவங்கள் எழுந்தருளச் செய்யப் பெற்றிருக்கின்றன. இச்சந்நிதிகள் எழில்மிக்க இனிய வெள்ளிக் கதவுகள் அமைக்கப் பெற்றுத் திகழ்கின்றன. நாள்தோறும் இரவில் பெருமாளுக்கு இங்கேயே திருமஞ்சம் அமைக்கப்படுகிறது.

இதனையடுத்து அந்தராள மண்டபமும்: திருவுண்ணாழிகை என்னும் கருவறையும் உள்ளன. கருவறையில் விசயகோடி விமான நடுவில், ஆதி சேடன் ஆகிய அரவணைப் பள்ளியில், அருள்திரு வீரராகவப் பெருமாள்

(மூலவர்) சயனத் திருக்கோலத்தில் காட்சி தருகின்றார். சாலிகோத்திர முனிவரின் தலையில், அவர் தம் வலக்கையை வைத்தருள்கின்றார். அவர் தம் இடத்திருக்கையில் ஞான முத்திரையும், பிரம தேவனுக்கு நான் மறைகளை உபதேசிக்கின்றார். மற்ற இரண்டு திருக்கைகளுள் ஒன்று அபயமுத்திரையையும் (அஞ்சேல் என்னும் குறிப்பும்), மற்றொன்று 'அருகே வருக' என்று நம்மை அழைப்பது போன்ற ஆக்வான முத்திரையும், கொண்டு விளங்குகின்றன.

மூலவருக்கு எதிரில், பூபாலராயர் என்னும் பொன் பீடத்தில் திரு எவ்வுள் கிடந்தான் என்னும் உற்சவர், சிறிய திருமேனியுடன் பொற் பணிகளும் கவசமும் பூண்டு, உபய நாச்சியாருடன் கண் கொள்ளாப் பேரழகில் திகழ்கின்றார். இவருக்கே நாள்தோறும் திருமஞ்சனம் முதலிய சிறப்புக்கள் நிகழ்த்தப் பெறுகின்றன. மற்றும், இவருடன் அருள்திரு பலிச் செல்வர், மணவாளன், கண்ணபிரான், சாளக்கிராம மூர்த்திகள் ஆகியோரும் எழுந்தருளியுள்ளனர். கருவறைப் பிராகாரத்தில் தென் மேற்கில், அருள்திரு இலட்சுமி நரசிம்மர் சந்நிதியும், வடமேற்கில் சக்கரத்தாழ்வார் சந்நிதியும் அமைந்து விளங்குகின்றன.

அருள்திரு வீரராகவப் பெருமாள் சந்நிதிக்குத் தென்பக்கம் பெரிய திருச்சுற்றில் கனகவல்லி (வசுமதி)த் தயார் கோயில் உள்ளது. அங்குத் தாயாரின் உற்சவத் திருவுருவம், இரண்டு யானைகள் துதிக்கையில் பூவேந்தி அர்ச்சிப்பது போல் நிற்க, வெளளிப்பீடத்தில் அனைத்து அணி கலன்களும் அணிந்து கொண்டு (சர்வாபரண பூஷிதையாய்), காட்சி தருகின்றது. இந்தச் சந்நிதியின் சுவர்களில் திருப்பாவை ஓவியங்கள் பல மிகவும் அழகுற வரையப்பட்டுள்ளன. இதன் பின்பக்கம் வெள்ளிக் கிழமை மண்டபம், அழகிய சிற்ப வேலைப்பாடுகள் மிக்க நான்கு தூண் களுடன் விளங்குகின்றது. பின்புறத் திருச்சுற்றில் இராமர் வேணு கோபாலர் தேசிகர் நம்மாழ்வார் ஆண்டாள் சந்நிதிகளும், வட பக்கத்தில் திருப்பாத மண்டபமும், திருக்கச்சிநம்பிகள் இராமானுசர்விசுவக்சேனர் சந்நிதிகளும், அலுவலகம் வாகன மண்டபம் கண்ணாடியறை முதலிய வையும் உள்ளன.

திருமழிசை ஆழ்வார் அருளிய நான்முகன் திருவந்தாதியிலும் (36), திருமங்கையாழ்வார் பாடிய பெரிய திருமொழிப் பத்துப்பாசுரங்களிலும், இத்தலமும் திருக்கோயிலும் மங்களாசாசனம் செய்து போற்றிப் புகழ்ந்து துதிக்கப்பட்டுள்ளன.

" முன்ஓர் தூது வானரத்தின் வாயில் மொழிந்து, அரக்கன்
மன்ஊர் தன்னை வாளியினால் மாள முனிந்து, அவனே
பின்ஓர் தூதன் ஆதி மன்னர்க்கு ஆகிப் பெருநிலத்தார்
இன்னார் தூதன் என நின்றான் எவ்வுள் கிடந்தானே"

—திருமங்கையாழ்வார்

இத்தலத்திற்கு அமாவாசை தினங்களில் பல்லாயிரக் கணக்கில் பக்தர்கள் வந்து அருள்திரு வீரராகவப் பெருமாளை, அன்புடன் வழி பட்டுச் செல்கின்றனர். இத்திருக்கோயில், அகோபில மடத்தின் ஆதீன பரம்பரை அருளாட்சியின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. தொண்டை நாட்டில் ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்று மிகவும் புகழோங்கித் திகழும் திவ்விய தேசங்களுள் ஒன்றாகிய இத்தலத்திற்குச் சென்று கண்டு வழிபட்டு, அன்பர்கள் அனைவரும் இம்மை மறுமை நலன்களைப் பெற்று மகிழ்வார்களாக.

நம்பெருமாள் வடிவநலன்

புலவர் திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

பகவன் அல்லது பகவான் என்னும் சொல், திருமாலையே சிறப்பாகக் குறிக்கும் என்பர் வைணவப் பெரியோர். 'பகம்' என்னும் சொல் ஆறு எனப் பொருள் படும். ஆறு சிறந்த குணங்களையுடையவன், பகவான் எனப்படுவான். ஆதலின் பகவான் என வழங்கப் பெறும் திருமாலுக் குரியபெரும் சிறப்பியற் குணங்கள் ஆறு என நூல்கள் கூறும். அவைகள் முறையே, வாத்சல்யம் சுவாமித்துவம் சௌசீல்யம் சௌலப்பியம் ஞானம் சக்தி என்பனவாகும்.

(1) வாத்சல்யம்: தான் ஈன்ற கன்றின் அழுக்கை இனிமையாக உண்டு அதற்குத் தன் பாலைக் கொடுத்து வளர்த்து, அதன்பால் தீங்கு புரிவோரை எதிர்த்துக் காக்கும் பசுவைப் போன்று, தன்னைப் புகலடைந்த அடியவனின் குற்றங்களைக் குணமாகக் கொண்டு, தன் சிறந்த குணங்களால் அவனை உய்யச் செய்து அவனுக்குப் பிறரால் யாதொரு தீங்கும் நேராதவண்ணம் காத்தருளும் இறைவனின் எல்லையற்ற பரிவுத் தன்மை. வத்சம்-கன்று. வாத்சல்யம்-கன்றின் பால் பசுவுக்குள்ள பரிவு போன்ற பெருங்கருணைத் திறம்.

(2) சுவாமித்துவம்: தன்னைச் சிறிதும் கருதாமல் புறக்கணித்து விட்டு ஓர் அடியவன் உலகியல் நுகர்ச்சிகளையே தேடி அலைந்துழன்று திரியினும், தன் உடைமையான அவனைத் தான் விடாமல் பின் தொடர்ந்து சென்று, அவன் நெஞ்சினுள் மறைந்துறைந்து நின்று நலம் செய்யும் பண்பு. சுவம்-உடைமை, பொருள். சுவாமி உடையவன் பொருளுக்குரிய தலைவன்.

(3) சௌசீல்யம்: தான் உயர்வற உயர்நலம் உடையவனே யாயினும், எத்துணை இழிந்தவர்களோடும், எத்தகைய வேறுபாடும் இன்றி புரையறக் கலந்து பழகி உறவாடும் தன்மை. சு-நல்ல. சீலம் பண்பாடு.

(4) சௌலப்பியம்: இறைவன் தன்னுடைய அழகிய திருவுருவை உயிர்களின் கண்களுக்குப் புலனாகுமாறு செய்தருளும் எளிமையியல்பு. சுலபம்-எளிமை.

(5) ஞானம்: உயிர்கள் தீவினைகளிற் செறிந்து கிடத்தலையும், அவைகள் வீடு பேற்றை அடைதற்கேற்ற தகுதியினை எய்தும் நிலைகளையும் பிறவற்றையும் எல்லாம் ஒருங்கே யுணரவல்ல பெருந்திறம்.

(6) சக்தி: உயிர்களின் குற்றங்களைக் களைந்து குணங்களை வளர்த்து ஆட்கொண்டு காத்தருளுதற்குரிய பேராற்றல்.

பகவானுக்குள்ள இந்த ஆறு பெருங்குணங்களும், திருவரங்கத்தில் அர்ச்சையாய் எழுந்தருளியிருக்கும் நம்பெருமாள் பால் அமைந்திருத்தலை நாம் தெளியக் காணலாம். பெருமானின் இடக்கை தன் திருவடிகளைக் சுட்டிக் காட்டிக் கொண்டிருப்பது, உயிர்களின் குற்றங்களையே குண மாகக் கொண்டு யாவரையும் ஏற்றருளும் வாத்சல்யத்தைப் புலப்படுத்து கின்றது. முகத்தில் காணப்படும் புன்முறுவல் எத்துணை இழிந்தா ரோடும் கலந்து உறவாடிப் பழகும் சௌலப்பியத்தைக் குறிக்கின்றது. பகவானின் தலையில் ஒளிரும் திருமுடி, அவனே எல்லோரையும்விட ஞானம், சக்தி ஆகியவைகளினால் உயர்ந்த தலைவன் என்னும் சுவாமித் துவத்தை உணர்த்துகின்றது. எல்லோருக்கும் கட்புலனாகும் வண்ணம் தாமரை மலரில் மெல்லென ஊன்றி நிற்கும் இறைவனது திருவடி களின் நிலை, சௌசீல்யத்தைச் சுட்டுகின்றது.

மேற்கூறிய கருத்துக்கள் பலவும் பிள்ளைலோகாசாரியார் என்னும் திருமால் நெறிப் பெருஞ் சான்றோரால், செவ்விதின் விளக்கப் பெற் றுள்ளன. "குற்றங்கண்டு வெருவாமைக்கு வாத்சல்யம்; காரியம் செய்யும் என்று துணிகைக்குச் சுவாமித்துவம்; சுவாமித்துவம் கண்டு அகலா மைக்குச் சௌசீல்யம்; கண்டு பற்றுகைக்குச் சௌலப்பியம்; விரோதி யைப் போக்கித் தன்னைக் கொடுக்கைக்கு ஞானசக்திகள். இவையெல் லாம் நமக்கு நம் பெருமாள் பக்கலிலே காணலாம். திருக்கையிலே பிடித்த திவ்விய ஆயுதங்களும் வைத்து அஞ்சல் என்ற கையும், கவித்த முடியும், முகமும், முருவலும், ஆசனபத்மத்திலே அழுத்தின திருவடியு மாய் நிற்கிற நிலையே நமக்குத் தஞ்சம். இரட்சகத்துவம் போக்கியத் துவம் ஆகிய இரண்டும் பெருமாள் திருமேனியிலே தோற்றும்" என்று பிள்ளை லோகாசாரியார், தாம் இயற்றிய முமுட்சுப்படி என்னும் நூலில் விளக்கியிருத்தல் அறிந்து மகிழ்தற்குரியது.

——::——

"வன்தொண்டன் என்பதோர் வாழ்வு"

டாக்டர் வித்துவான் இரத்தினசபாபதி, எம்.ஏ., பி.ஓ.எல்., பி.எச்டி.,

தம்பிரான் தோழரான நிகழ்ச்சியில் அமைந்த சிறப்பு

தமிழகத்தின் தத்துவங்கள் மட்டுமல்ல, தத்துவத் தலைவனாக விளங்கும் இறைவனும் நினைத்தற்கரிய பல அருஞ்செயல்களைப் புரிந்து மக்களுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பை விளக்கியுள்ளான்.

அவதாரப் பெருமையை உணர்த்து முகத்தால் வந்தருளிய இராமபிரான் இந்தியா முழுவதிலும் விளங்கும் பலரைத் தன்னுடைய உடன்பிறப்பு என்ற உரிமைக்கு உள்ளாக்கினான். அடுத்து, அவதார முறைமையில் விள்ங்கும் கண்ணன் மக்களோடு பலவாறான முறைகளை உண்டாக்கிப் பழகியிருக்கிறான். ஆனால் சுந்தரர் வரலாற்றில் அவதார முறையில்லாமல், இறைவன் தானே நேர்நின்று தன்னைத் தோழனாகத் தருகிறான். யாருக்குத் தருகிறான்? முன் ஒருமுறை சபையினர் மத்தியில் எல்லாரும் அறிய, 'அடிமை' என்ற உரிமையை யாருக்கு நிலை நாட்டினானோ, அவருக்கே தோழனும் உரிமைத் தருகிறான். ஏற்றுக் கொண்ட அடியவரும், தோழமையால் விளைந்த அனுபவங்களைச் சித்தரித்துக் காட்டுகிறார்.

இராமாவதாரத்தில் ஒரு நுட்பமான குறிப்பு உண்டு. குகன் இராமனுக்கு உடன்பிறந்தானா? தோழனா? "குகனொடும் ஐவரானோம்" என்பதை எண்ணினால் உடன் பிறப்பு முறையே. ஆனால் உடனிருந்து கவனித்த, சிறையிருந்த செல்வியின் வாக்காக ஓர் உண்மையைக் கம்பநாடர் தெரிவிக்கிறார்.

"ஆழ்நீர்க் கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு எம்பி நின் தம்பி
நீ தோழன் மங்கை கொழுந்தி எனச் சொன்ன
ஆழி நண்பினை உன்னி மயங்குவான்".

சுந்தரரின் வாழ்க்கை முறையை நன்கு உணர்ந்த காரணத்தாற் போலும் இராமனை இவ்வாறு கூறுமாறு ஓர் அமைப்பை உண்டாக்கிக் காட்டுகிறார் கம்பர். இங்கே முறைச் சிக்கல். இராமன் தன் தம்பி இலக்குமணனைக் குகனுக்கு உடன் பிறந்தானாக அமைத்துக் காட்டுகிறான். 'சீதையைக் கொழுந்தி' என்று சொல்லுவதன் மூலமாக இராமபிரான் தன்னோடு இணைந்த எல்லாரையும் குகனோடு இணைத்துக் காட்டும் முறையும், தன்னோடு மட்டும் குகனை இணைக்கும் முறையும் தன்னோடு மட்டும் குகனை இணைக்கும் முறையும் வேறாக உள்ளன என்பதை அறியலாம். அவதார அமைப்பில் பரம்பொருள் மனித உருக்கொண்டு வந்துவிட்டதால் இத்தகையச் சிக்கல் தோன்றுகிறது. சிக்கல் எதுவாயினும், தோழமை முறையைக் கம்பர் இராம காதையில் அமைத்துக் காட்டி விட்டார்.

சேக்கிழார் இந்நிகழ்ச்சியைச் சிக்கலின்றி ஆனால் சிக்கல் தீர்க்கும் முறையில் அமைத்துக் காட்டுகிறார்.

"தோழமை ஆக உனக்கு நம்மைத் தந்தனம்" என்பது அசரீரி வாக்கு என்ற பெயரில் அமைந்த சேக்கிழார் வாக்கு.

'நம்மை' என்ற சொல், பொருள் பொதிந்த சொல். இறைவன் தன்னைப் உயர்வுப் பன்மையில் அமைத்துக் கூறினான் என்ற பொதுமைப் பொருளைக் கொண்டாலும், தம்மையும் தம்மைச் சார்ந்த பொருளனைத்தையும் தோழமை முறையில் சுந்தரருக்கு உரிமையாக ஆக்கி விடுகிறான், என்ற சிறப்புப் பொருளும் அச்சொல்லுக்கு உண்டு.

சேக்கிழாரின் சொல்லமுதம் மேலும் ஒருபடி சென்று நம்மை வாழ வைக்கிறது.

பருப்பொருள், நுண்பொருள் என; குணப்பொருள் குணிப்பொருள் எனப் பொருள்களைப் பிரிக்கும் முறையினை ஆன்றோர் கொள்வர். பருப்பொருளை நுண்பொருளாகவும், நுண்பொருளைப் பருப்பொருளாகவும் அமைத்துச் சிறப்பிபது கவிஞர் மரபுகளுள் ஒன்று.

'தோழமை' என்பது உறவு முறைப் பண்பு. 'தோழன்' அப் பண்பினை உடையவன். தோழனுக்கு வேறு பல பண்புகளும் இருக்கலாம். 'தோழன்' என்று ஒருவன் மற்றொருவனைக் குறிப்பிட்டால், அவன் பலருக்கும் பல உறவுமுறைப் பண்புகளை உடையவனாக இருப்பான். ஆனால் இவனுக்கு அவன் கொள்ளும் உறவு முறையானது தோழமையை அடிப்படையாகக் கொண்டது என்ற அளவுக்குத் தான் கொள்ள முடியும். யானையை முழுவதும் பார்க்க முடியாத ஒருவன், துதிக்கையை மட்டும் பார்த்துவிட்டு யானை பனைமரம் போன்றது, என்று கூறுவானாயின், அது பொய் என்பதாகாது. அவன் அப்பொருளோடு குறிப்பிடப் பெற்ற அந்த ஓர் அடிப்படையில் உறவு முறையைக் குறிப்பிடுகிறான் என்ற அளவுக்கு அது உண்மையுடையது என்பதே.

பருப்பொருளை நுண்பொருளாக அல்லது குணிப்பொருளைக் குணப் பொருளாக மாற்றி அமைக்கும் போது வாழ்வு முறையிலும் அனுபவ முறையிலும் பெருமளவில் மாற்றங்கள் தோன்றி விடுகின்றன. இத்தகைய அடிப்படையில் அமைகிறது சேக்கிழார் வாக்கு.

"தோழன் ஆக உனக்கு நம்மைத் தந்தனம்" என்று அருளவில்லை சேக்கிழார். "தோழமை ஆக உனக்கு நம்மைத் தந்தனம்" என அருளுகிறார். கம்பர் வாக்கில் அமையும் முறை வேறு. "நீ தோழன்" என்பதே. சேக்கிழார் வாக்கைப் போலவே அமைத்துக் காட்டும் முறையைக் கம்பர் வாக்கிலும் காணலாம்.

"விற்பெருந் தடந்தோள் வீர!
வீங்கு நீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்த ளாய
நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற்பிறப்பு என்பது ஒன்றும்
இரும்பொறை என்பது ஒன்றும்
கற்பு எனும் பெயரது ஒன்றும்
களிநடம் புரியக் கண்டேன்"

என்ற கம்பர் வாக்கில், சீதை என்ற குணிப்பொருள் மூவகைக் குணப் பொருள்களின் கூட்டுப் பொருளாக மாற்றம் பெறுவதைக் காணலாம்.

அவ்வாறே, கம்பர் காட்டும் நுட்பம் ஒன்றைச் சேக்கிழார் வாக்கில் நாம் காண முடியவில்லை. ஆனால் வேறு ஒரு தொடர் அக்கருத்தை எடுத்துக் கொடுத்து நிறைவு செய்து விடுகிறது.

பரதன் கங்கைக்கரையை வந்தடைந்தான். அவனும் அவனுடைய படைகளும் கங்கையைக் கடப்பதற்குப் படகுகள் வேண்டும். அவை களைப் பெற வேண்டுமாயின் குகனுடைய உதவி தேவை. பரதன் நாட்டரசன் ஆயின், குகன் காட்டரசன். குகனும் கங்கையின் தென் கரைக்கு வந்து விட்டான். பரதன் சென்று குகனைக் காண்பதா? குகன் வந்து பரதனைக் காண்பதா? இது அரச முறையில் எழும் சிக்கல். சுமந்திரன் அமைச்சன். பரதன் கேட்பதற்கு முன்னமேயே, அமைச்சன் குகனைப் பற்றிய செய்திகளை அமைத்துக் கூறுகிறான்.

சுமந்திரன் வார்த்தையைக் கேட்டவுடன் பரதன், "என்னுடைய அரசனாகிய இராமன் தானே முந்திச் சென்று, தம்பி என்றோ தோழன் என்றோ தழுவிக் கொள்ளக் கூடிய அந்த அளவுக்குச் சிறப்புடையவன் குகன் என்றால் அவன் வந்து என்னைக் காண்பதற்கு முன்னர் யானே சென்று அவனைக் காண்பேன்" என்று சொல்லி எழுகிறான்.

தன் முன்னே அவன் தன்மை
    தந்தை துணை முந்துரைத்த
சொன் முன்னே உவக்கின்ற
    துரிசிலாத் திருமணத் தான்
"மன் முன்னே தழீஇக் கொண்ட
    மனக்கினிய துணைவனேல்
என் முன்னே அவன் காண்பென்
    யானே சென்று" என எழுந்தான்

பரதன் இவ்வாறு கொள்கிறான் என்றாலும், சுமந்திரன் அவ்வாறு சொல்லவில்லை.

"கங்கை இரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்
உங்கள் குலத் தனிநாதற்கு உயிர்த்துணைவன் உயர்தோளான்"

என்பனவே சுமந்திரன் வாக்கு. "உங்கள் குலத்தின் தனித்தலைவனாகிய இராமனுக்கு உயிர்த் துணைவன்" என்ற சுமத்திரன் வாக்குக்கு, "இராமன் தானே முந்திச் சென்று தழுவிக் கொண்ட உயிர்த்துணைவன்" என்று உரை காண்கிறான் பரதன். சுமந்திரன் வார்த்தை இத்தகைய பொருளைத் தருமா?

மரபு முறையையும் இலக்கண நுட்பத்தையம் அமைத்து இத்தகைய பொருளைக் கம்பர் பரதன் மூலமாக நமக்கு எடுத்துக் காட்டுகிறார். இங்கே தான் அவர் கவிச் சக்கரவர்த்தி.

உரிமை, உடைமை ஆகிய இணைப்புக்களை ஆறும் வேற்றுமைப் பொருளாக அமைத்துச் சொல்ல வேண்டும் என்பது இலக்கணம். ஆறும் வேற்றுமைக்கு உரிய பொருள் கிழமைப் பொருள் – உரிமைப் பொருள் இராமனது தலை; இராமனது வீடு; கபிலரது பாட்டு என்பன போல உரிமையை விளக்கும் நிலைமை அவ் வேற்றுமைக்கு உண்டு.

ஆனால் உயர்திணைப் பொருள் ஒன்று. இன்னொரு உயர்திணைப் பொருளோடு உரிமை கொள்ளும் போதும் உரிமை உரிமைதான்; உறவு முறை உறவு முறைதான். ஆனால் உயர்திணைப் பொருள் உயர்திணைப் பொருளோடு கொள்ளும் உறவு முறைக்கு ஆறும்

வேற்றுமைக்கு உரிய உருவாகிய 'அது' என்பதைப் உபயோகப் படுத்தக் கூடாது; 'கு' என்ற உருபைத்தான் பயன்படுத்த வேண்டும். 'இராமனது தலை' என்று சொன்னது போல 'இராமனகு மனைவி சீதை' என்று சொல்லுதல் கூடாது 'இராமனுக்கு மனைவி சீதை' என்று தான் கூற வேண்டும். இது மரபு. 'அது' என்ற உருபுக்குப் பதிலாகக் 'கு' என்ற எழுத்து வரும் என்பது தான் இலக்கணம். 'அது' என்ற உருபு என்ன பொருளைத் தருமோ அதே பொருளைத் தான் 'கு' என்ற எழுத்தும் தரும். 'அது' என்ற ஆறும் வேற்றுமை தரக்கூடிய உரிமைப் பொருளைத்தான் 'கு' என்ற எழுத்தும் தரும்.

கம்பர் இந்த இலக்கணத்தை மேலும் நீட்டுகிறார். 'அது' என்ற ஆறும் வேற்றுமை உருபு தர வேண்டிய உரிமைப் பொருளை கிழமைப் பொருளை, 'கு' என்ற எழுத்தானது கொடுக்கும் என்பதில் தடை யில்லை. அந்த 'கு' என்ற எழுத்து, ஆறும் வேற்றுமைக்குரிய பொருளை உணர்த்துவதோடு, தனக்குரிய தனிப் பொருளையும் உணர்த்தும். 'கு' என்ற எழுத்து, ஆறும் வேற்றுமைப் பொருளைத் தான் தரும்; தனக்குரிய பொருளைத் தராது என்று எங்கேயும் கூறவில்லை.

(தொடரும்)

புதிய வரலாறு படைப்போம் !

வருகிற மே மாதம் 9, 10, 11 தேதிகளில் குமரி மாவட்டம் நாகர் கோவிலில் நடை பெறவிருக்கும் அனைத்து மாவட்டக் கிளைச் சங்கங்கள் பேராளர் மாநாட்டினையொட்டி 11-5-75 அன்று பிற்பகல் மாபெரும் ஊர்வலம் ஒன்று நடத்தி அதில் நமது சைவ, வைணவ சமயச் சிறப்புக் களையும், தமிழர் பண்பாடு, நாகரிகம் ஆகியவைகளையும் விளக்கும் அலங் கார ஊர்திகள் பெருமளவில் பங்கு கொள்ள வேண்டியது அவசியமாகை யால் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் அலங்கார ஊர்திகளை மாநாட்டு ஊர்வலத்திற்கு அனுப்ப மாவட்டத் தெய்விகப் பேரவைகளும் ஏற்பாடு செய்து, அது சம்பந்தமான தகவல்களைப் பேரவைத் தலைமையகத்திற்கும் குமரி மாவட்டத் தெய்விகப் பேரவைச் செயலாளர் திரு. ஜி. ஸ்ரீகுமார் (6, மாள்ட்டம்மாள் தெரு, நாகர் கோவில்–1) அவர்களுக்கும் தெரிவிக்கு மாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்து சமயத்திற்குப் புத்துணர்ச்சியூட்டவும், மறுமலர்ச்சி உண்டாக்கவும் வேண்டியது மிகவும் இன்றியமையாதது என்பதைக் காட்டும் வகையில் மாநாட்டு நிகழ்ச்சிகள் அமைய வேண்டும் என்பது பேரவையின் பேரவா. அதற்கான முறையில் எல்லாச் சங்கங்களும் ஒத்துழைத்து மாநாடு மிகவும் வெற்றிகரமாக நடைபெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

நம்பியாண்டார் நம்பி - கலித்துறைத் திருவந்தாதி

(குன்றக்குடி ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் பதவுரையுடன்)

பிரதி செய்தவர் : சேக்கிழார்தாசன்

விறன்மிண்ட நாயனர்

பேசும் பெருமையவ் வாரூ ரனையும் பிரானவனு
மீசன் றனையும் புறகுதட் டென் றவ னீசனுக்கே.
நேச னெனக்கும் பிரான்மனைக் கேபுக நீடுதென்றல்
வீசும் பொழிற்றிருச் செங்குன்ற மேய விறன் மிண்டனே. 6

(இ-ள்): யாவராலும் எடுத்துக் கூறும் பெருமையையுடைய அந்நம்பி யாரூரரையும்; அவரைத் தடுத்தாண்ட முதல்வராகிய சிவபிரானையும் அடியார்க்குப் புறம்பு செய்யென்று கூறினவரும்; அச்சிவபிரானுக்கு அன்பரும் அடியேனுக்கும் பிராணுயுள்ளவரும் யாரெனில்; மனை யிடத்துப் புகும்படி மிக்க தென்றற் காற்று வீசும் சோலை சூழ்ந்த; திருச்செங்குன்றூரில் அவதரித்த விறன்மிண்டநாயனர். (எ-று.)

அமர்நீதி நாயனர்

மிண்டும் பொழிற்பழை யாறை யமர்நீதி வெண்பொடியின்
முண்டந் தரித்த பிராற்குநல் லூரின்முன் கோவணநேர்
கொண்டிங் கருளென்று தன்பெருஞ் செல்வமுந் தன்னையுந்தன்
றுண்ட மதிநுத லாளையு மீந்த தொழிலினனே. 7.

(இ-ள்): நெருங்கிய சோலை சூழ்ந்த பழையாறையென்னும் ஊரில் அவதரித்த அமர்நீதி நாயனர்; வெள்ளிய திருநீற்றுத் திரிபுண்டர மணிந்த சிவபிரானுக்கு; திருநல்லூரின் கண் நீர் முன் என்னிடத்து வைத்த கோவணத்துக்கு நேராக நிறையுள்ள கோவணத்தை இங்கு வாங்கிக் கொண்டருளுமென்று; தன்பெருஞ் செல்வத்தையும் தன்னையும்; கீற்றுமதி போலும் நெற்றியையுடைய தன் மனையாளையும் அக்கோவணத்திற்கிடையாக நிறுத்துக் கொடுத்த தொழிலையுடை யவர். (எ-று).

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

தொழுதும் வணங்கியு மாலயன் றேடருஞ் சோதி சென்றுங்
கெழுதுந் தமிழ்ப்பழ வாவணங் காட்டி யெனக்குன்குடி
முழுது மடிமைவந் தாட்செ யெனப்பெற்ற வன்முரறே
ழெழுகு மலரினற் ருரெம் பிரானம்பி யாரூரனே. 8

(இ-ள்): கையாற்ருெழுதும் சாட்டாங்கமாய் நிலமுற வணங்கியும் திருமாலும் பிரமனும் தேடுதற்கரிய சிவபிரான் அத்திருமணத்தில் எழுந்தருளி; தமிழால் முன் எழுதப்படும் பழைய அடிமை யோலை யைக் காட்டி; எனக்கு உன் தாதை மூதாதை முதலியோரும் நீயும் அடிமை; வந்து அடிமை செய் என்று தடுத்தாட் கொள்ளப் பெற்றவர் யாரெனில்; ஒலிக்கின்ற தேன் வண்டுகள் சஞ்சரிக்கும் நல்ல மலர்மாலையை யணிந்த எமது முதல்வராகிய நம்பியாரூரர். (எ-று).

எறிபத்த நாயனுர்

ஊர்மதின் மூன்றட்ட வுத்தமர்க் கென்றேரு ருயர்தவத்தோன்
ருர்மலர் கொய்யா வருபவன் றண்டின் மலர்பறித்த
வூர்மலை மேற்கொளும் பாக ருடறுணி யாக்குமவ
னேர்மலி மாமதில் சூழ்கரு வூரி லெறிபத்தனே. 9

(இ-ள்); வானின் கண் திரிகின்ற முப்புரங்களை எரித்தருளிய சிவபிரானுக்கென்று; ஓர் உயர்ந்த தவத்தையுடைய சிவகாமி யாண்டார்; திருப்பள்ளித் தாமத்திற்குரிய மலரைக் கொய்து திருப் பூங்கூடையில் கொண்டுவரும்; தண்டினின்றும் அம்மலரைப் பறித்த பட்டத்து யானையையும்; அதன் மேற்கொண்ட பாகரது உடம்பையும் வெட்டினவர் யாரெனில்; அழகு மிகுந்த பெரிய மதில் சூழ்ந்த திருக் கருவூரின் கண் வாழ்ந்த எறிபத்த நாயனுர். (எ-று).

ஏனுதி நாத நாயனுர்

பத்தனை யேனுதி நாதனைப் பார்நீ டெயினி தன்னு
ளத்தனைத் தன்னே டமர்மலைந் தானெற்றி நீறுகண்டு
கைத்தனி வாள்வி டொழிந்தவன் கண்டிப்ப நின்றருளு
நித்தனை யீழக் குலதீப னென்பரிந் நீணிலத்தே. 10

(இ-ள்): மெய்ப்பத்தியிற் சிறந்தவராகிய ஏனுதிநாத நாயனுரை; நிலவுலகத்தின் கணுயர்ந்த எயினனூரில் வாழ்ந்த முதல்வராகிய; தன்னுடன் போர் செய்த அதிசூரன் நெற்றியில் திருவெண்ணீற்றைக் கண்டு; தன் கையிலிருக்கும் ஒப்பற்ற வாட்படையை விடாமல்; அவ்வதிசூரன் தன்னை வெட்டும்படி நின்றருளிய நித்தியரை; இந்த அகன்ற நிலவுலகத்து ஈழக்குலத்துக்குத் தீபம் போன்றவரென்று சொல்லுவார்கள். (எ-று).

கண்ணப்ப நாயனுர்

நிலத்திற் றிகழ்திருக் காளத்தி யார்திரு நெற்றியின்மே
லலத்திற் பொழிதரு கண்ணிற் குருதிகண் டுண்ணடுங்கி
வலத்திற் கடுங்கணை யாற்றன் மலர்க்கண் ணிடந்தப்பினன்
குலத்திற் கிராதனங் கண்ணப்ப னுமென்று கூறுவரே. 11

(இ-ள்): நிலவுலகின்கண் விளங்கா நின்ற திருக்காளத்தியப்பரது திருநெற்றியின் கீழ்; தம் தொண்டர் பத்தியை வெளிப்படுத்துங் காரணத்தால் கண்ணினின்றும் சொரியும் உதிர நீரைக் கண்டு உள்ளத்தில் அச்சமுற்று; கடிய அம்பினல் தன் வலப்பாலிலுள்ள மலர் போலுங் கண்ணைத் தோண்டி யெடுத்துச் சாத்தினவர் யாரெனில்; குலத்தில் வேடுவராகிய கண்ணப்ப நாயனுரென்று அறிஞர் சொல்லுவர் (எ-று). ஏ-அசை

மேல் என்றது கீழிற்குப் பந்தலின் கீழிருந்தானைப் பந்தல் மேலிருந்தானென வழங்கும் சிறுவரவிற்ருய வழக்கு அன்றி இலக்கணை யெனினும் அமையும்.

குங்குலியக் கலய நாயனுர்

ஏய்ந்த கயிறுதன் கண்டத்திற் பூட்டி யெழிற்பனந்தாட்
சாய்ந்த சிவனைத் தானெனன்பர் காதலி தாலிகொடுத்
தாய்ந்தநற் குங்குலி யங்கொண்ட னற்புகை காலனைமுன்
காய்ந்த வரற்கிட்ட தென்கட வூரிற் கலயனையே 12

(இ-ள்): மனையாளது திருமங்கிலியத்தை மாற்றித் தெளிவான நல்ல குங்கிலியத்தை வாங்கிக் கொண்டு; அனலிலுண்டாக்கிய அக்குங்கிலியத் தூபத்தை முன்னுளில் மார்க்கண்டேயர்க்காகக் கூற்றையுதைத்த சிவபிரானுக்கு இட்ட; தெற்கின்கணுள்ள திருக் கடவூரில் அவதரித்த கலயநாயனுரைப்; பொலிவமைந்த பூங்கச்சைத் தன் கழுத்திற் பூட்டி; அழகிய திருப்பனந்தாளிற்றிருமுடி வளைந்த சிவபிரானை நேராகச் செய்தவரென்று அறிஞர்கள் கூறுவர். (எ-று)

மானக்கஞ்சாற நாயனுர்

கலச முலைக்கன்னி காதற் புதல்வி கமழ்குழலை
நலசெய் தவத்தவன் பஞ்ச வடிக்கிவை நல்கெனலும்
அலசு மெனக்கரு தாதவள் கூந்த லரிந்தளித்தான்
மலைசெய் மதிற்கஞ்சை மானக்கஞ் சாற னெனும் வள்ளலே. 13

(இ-ள்): கும்பத்தை யொத்த முலைகளையுடைய கன்னியாகிய தன்னுல் விரும்பப்பட்ட புத்திரியின் மணங் கமழ்கின்ற அளகத்தை நோக்கி; நன்மை மிக்க தவவேடத்தை யுடையராய் வந்த சிவபிரான் மயிர்ப் பூணுலுக்கு இவ்வளகத்தைக் கொடு என்று கேட்கவும்; அப்புதல்வி வருந்துவாளென்று தம் உளத்தில் நினையாமல்; அவள் அளகத்தை அரிந்து கொடுத்தவர் யாரெனில்; மலையை யொத்த மதில் சூழ்ந்த கஞ்சாறூரில் அவதரித்த மானக்கஞ்சாற நாயனுரென்னும் கொடையுடையோர். (எ-று) ஏ-அசை

அரிவாட்டாய நாயனார்

வள்ளற் பிராற் கமு தேந்தி வருவோ னுகலுமிங்கே
வெள்ளச் சடையா யமுதுசெய் யாவிடி லென்றலையைத்
தள்ளத் தருமென்று வாட்பூட் டியதடங் கையினன்கா
ணள்ளற் பழனக் கணமங் கலத்தரி வாட்டாயனே. 14

(இ-ள்): வள்ளற்றன்மையுடைய சிவபிரானுக்குத் திருவமுதுக்குரிய படித்தரங்களைச் சிரசிற்றாங்கிக் கொண்டு வருகின்றவர் உடம்பின் மெலிவால் கால்தவறிக் கமரிற் சிந்தவும்; இக்கமரில் கங்கை நீர் பெருக்கெடுக்கும் சடையையுடையவரே இதனைத் திருவமுது செய்யா என்னுடைய தலையை அரிவாளால் அரிந்து வீழ்த்தப் படுமென்று; அரிவாளைக் கழுத்தின்மாட்டிய பெருமையான கையையுடையவர் யாவரெனில்; அள்ளற் சேறு தங்கிய வயல்சூழ்ந்த கணமங்கலத்தில் அவதரித்த அரிவாட்டாய நாயனார். (எ-று)

ஆனாய நாயனார்

தாயவன் யாவுக்குந் தாழ்சடை மேற்றனித் திங்கள் வைத்த
தூயவன் பாதந் தொடர்ந்து தொல் சீர்துளை யாற்பரவும்
வேயவன் மேன்மழ நாட்டு விரிபுனன் மங்கலக்கோன்
ஆயவ னானைய னென்னையு வந்தாண் டருளினனே. 15

(இ-ள்): எல்லா உயிருக்கும் தாயொத்தவனாய் தாழ்ந்த சடை முடியின் மேல் ஒப்பற்ற இளம் பிறையைச் சூடியதூயோனது திருவடிகளை மனதால் பற்றி பழைமையான திருநாமமாகிய திருவைந்தெழுத்தைத் துளை வழியால் துதிக்கும் புள்ளாங் குழலையுடையவரும்; மேன் மழ நாட்டின் கண் விரிந்த புனல் சூழ்ந்த திருமங்கலமென்னும் திருப்பதியில் அவதரித்த முதல்வரும் ஆகிய; ஆனாய நாயனார் அடியேனைத் திருவுள்ளங் களிகூர்ந்து அடிமைக் கொண்டவர் (எ-று).

சுந்தர மூர்த்தி சுவாமிகள் துதி

அருட்டுறை யத்தர்க் கடமைப்பட் டேனினி யல்லனென்னும்
பொருட்டுறை யாவதென் னேயென்ன வல்லவன் பூங்குவளை
யிருட்டுறை நீர்வய னாவற்பதிக் கும்பிரா னடைந்தோர்
மருட்டுறை நீக்கிநல் வான்வழி காட்டிட வல்லவனே. 16

(இ-ள்): திருவருட்டுறை ஆலயத்தில் வீற்றிருந்தருளும் சிவபிரானுக்கு ஆட்பட்டேன்; இனி மேல் அடியனல்லேன் என்று கூறும் பொருள் நிலைமையாவது எவ்வாறென்று திருப்பதிகத்தில் ஓதியருள வன்மையுடைய நம்பியாரூரர்; பொலிவமைந்த குவளை மலர்களின் கரு நிறமானது தங்கிய நீர் சூழ்ந்த வயல்களையுடைய திருநாவலூருக்கு முதல்வர்; தம்மை அடைந்தவர்களது மயக்கவழியை நீக்கி நல்ல முத்திவழியைக் காட்டவல்லவர். (எ-று)

திருமாலடியார்

இராமாநுசர்

பேராசிரியர் திரு. கா. அ. மணவாளன், எம்.ஏ., பி.ஓ.எல்

(21)

கூரத்தாழ்வானின் மறைவிற்குப்பின் இராமாநுசர் ஒரு நாளும் திருவரங்கத்தை விட்டு வெளியூருக்குச் செல்லவில்லை. அதற்கு முன்பே கீழைத் திருப்பதியில் சில பணிகளைச் செய்து முடித்து விட்டார். சிதம்பரத்தில் நடராஜப் பெருமானுக்கு அருகில் கோவிந்தராஜப் பெருமாள் காட்சி வழங்குவதை இன்றும் காணலாம். அத்தலத்தைத் திருச்சித்திர கூடம் என்று ஸ்ரீவைணவர்கள் போற்றுவார்கள். அங்கிருந்த கோவிந்த ராஜப் பெருமாளை இரண்டாம் குலோத்துங்கன், கோயில் விஸ்தரிப்புக் காரணமாக அப்புறப்படுத்தி விட்டான் என்பது ஆராய்ச்சியாளர்களின் கொள்கை. இராமாநுசர் அச்செய்தியைக் கேள்வியுற்று அப்பெருமாளைக் கீழைத் திருப்பதியில் கோயிலமைத்துப் பிரதிஷ்டை செய்து விட்டார். அதற்குப் பின்பு தான் திருவரங்கத்திற்கு வந்து நிரந்தரமாக அங்கேயே தங்கி விட்டார்.

அமுதனார் இராமாநுசரைச் சரணடைதல்

திருவரங்கத்தில் அமுதனார் குடும்பம் மிகப் பழைய குடும்பம். ஆனால் அவர் அத்வைத மரபைச் சார்ந்திருந்தார். அவருடைய அன்னையார் இராமாநுசருடைய சொற்பொழிவுகளைக் கேட்டு, அவரையே தஞ்சமாக அடைந்து விட்டார். அக்காலத்தில் திருவரங்கக் கோயிலின் திறவுகோல் பொறுப்பையும், சில அதிகாரப் பொறுப்பையும் அமுதனார் குடும்பம் உரிமையாகப் பெற்றிருந்தது. ஒருநாள் அமுதனார் தம் தகப்பனாருக்குத் தென் புல வழிபாடாகிய 'திதி' செய்ய வேண்டி வந்தது. அதுவரை அத்வைத பிராம்மணர்களைக் கொண்டே நடத்தி வந்த திதியை அந்த ஆண்டு இராமாநுசர் சீடர்களில் ஒருவராகிய ஸ்ரீவைணவரைக் கொண்டு நடத்த வேண்டுமென்று தாயார் கேட்டுக் கொண்டார்.

அமுதனாரால் அம்மாவின் வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியவில்லை. உடனே இராமாநுசருடைய மடத்திற்குச் சென்று தண்டனிட்டு ஒரு ஸ்ரீ வைணவ பிராம்மணரைத் தன் தந்தையாரின் திதியில் கலந்து கொண்டும், உண்டும் நிறைவேற்றி வைக்க அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டார். இராமாநுசரும் அவர் விருப்பப்படியே தமது சீடர்களில் மிகவும் உயர்ந்தவரான கூரத்தாழ்வானை அனுப்பி வைத்தார். கூரத்தாழ்வானும் அமுதனார் வீட்டுக்குச் சென்றார். சிராத்தம் முடிந்தது. கடைசியில் விருந்தினருக்குத் தட்சணை கொடுப்பது வழக்கம். தட்சணை

யைப் பெற்றுக் கொண்டு விருந்தினர் 'யான் திருப்தி அடைந்தேன்' என்றும் சொல்வது மரபு. ஆனல் கூரத்தாழ்வான் எவ்வளவு தட்சணை கொடுத்தாலும் அல்லது பொருள்களைக் கொடுத்தாலும் 'திருப்தி' சொல்லவில்லை. அமுதனர் வியந்தார் 'சுவாமி அடியேன் செய்த தவறு யாது ? எது கொடுத்தால் திருப்தி சொல்வீர்கள்' என்று கேட்டார்.

உடனே கூரேசர் "கோயில் திறவு கோலையும் உம்முடைய அதிகாரத்தையும் கொடுத்தால் சொல்கிறேன்" என்ருர். அமுதனரும் தன் தந்தையின் திவசமாகிய 'திதி' குறைவின்றி நடை பெறுவதற்காக அவர் விருப்பப்படியே திறவுகோலையும்-அதிகாரத்தையும் நீர் வார்த்துத் தந்தார்.

கூரத்து ஆழ்வானின் முகம் மலர்ந்தது. தென்னரங்கன் செல்வத்தைத் திருத்தி வைக்க இராமாநுசரிடம் இவைகளை ஒப்படைப்பேன் என்று உறுதி மொழியளித்து அதைப் பெற்று வந்தார். இராமாநுசர் திருவடிகளில் வைத்து வணங்கினர். அப்பொழுது இராமாநுசர் "அமுதனர் பெரிய செல்வந்தராயிற்றே; நிறையப் பொருள் கொடுத்திருப்பாரே" என்று கேட்டார். உடனே ஆழ்வான் "அப் பொருள்கள் உண்மையில் பொருள்களல்ல. நிலைக்காத அவைகளைக் ஏழைகளின் வயிற்றை நிரப்ப அளித்து விட்டேன். நிலையான செல்வம் "இத் திறவு கோலே" என்று கூறினர். இராமாநுசரும் கூரத்தாழ்வானின் திருவுள்ளக் கருத்தைப் புரிந்து கொண்டார். இதுவும் திருவரங்கனின் திருவுள்ளம் தான், என்று ஏற்றுக்கொண்டார். இதற்குப்பின் அன்னை வழியாக இராமாநுசருடைய அருமைகளைக் கேள்வியுற்ற அமுதனர் அவரையே சரணமாக அடைந்து உய்வேன் என்று உறுதி கொண்டு அன்றிரவே இராமாநுச மடத்திற்கு வந்து விட்டார். இராமாநுசரும் அமுதனரைத் தன் சீடர் குழுவில் சேர்த்து அரும் பொருள்களை உபதேசித்தார். அப்பொருள்களைக் கேட்ட அமுதனர் இராமாநுசருடைய பெருங் கருணையையும், அவர் இவ்வுலகில் தோன்றி மக்களுக்கு ஆற்றியுள்ள அரும்பணிகளையும் எண்ணி எண்ணி வியந்தார். அவைகளை அப்படியே ஒரு அந்தாதி நூலாக இயற்றி யருளினர். அதற்கு இராமாநுச நூற்றந்தாதி என்று பெயர். இந்நூற்றந்தாதியைப் 'பிரபந்த காயத்ரி' என்று கொண்டாடி ஸ்ரீ வைணவர்கள் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தோடு இணைத்து ஓதி வருகின்றனர்.

இராமாநுசர் பல ஆயிரக்கணக்கான சீடர் குழாங்களுடன் திருவரங்கத்தில் செங்கோல் செலுத்தி வந்தார். ஆம்; அச்செங்கோல் ஸ்ரீ வைணவ சமய சாம்ராஜ்ஜியச் செங்கோலேயாகும். திருவரங்கன் திருக்கோயிலில், தொண்டர்களைப் பல பணிகளுக்கும் நியமித்தார். விரிவான திட்டங்களைத் தீட்டி அதற்கு ஏற்றவர்களை-கைங்கர்யருசி (தொண்டில் ஊற்றம்) உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து அமர்த்தினர். வழிபாட்டு முறையிலும் இன்றியமையாத சீர்திருத்தங்களைச் செய்தார். வீதி செப்பனிடுவோர், சுற்றுக் கோயில் செப்பனிடுவோர், காவேரிக் கரை காப்போர், பல்வகை ஊழியங்கள் புரிவோர் என்று இவ்விதம் பல பிரிவினரை நிலையான மானியங்களை அளித்துக் குறைவின்றி நடைபெற்று வர ஏற்பாடு செய்தார்.

மூன்று திருமேனிகள்

இராமானுசரின் புகழ் இவ்விதம் உச்சநிலையிலிருந்த போது ஸ்ரீபெரும் பூதூரிலிருந்து சில ஸ்ரீவைணவத் தொண்டர்கள் திருவரங்கத்திற்கு வந்து சேர்ந்தனர். வந்தவரனைவரும் இராமானுசரை வணங்கி ஸ்ரீபெரும் பூதூரில் (இராமானுசர் பிறந்த ஊரில்) எல்லோரும் எப்பொழுதும் கண்டு வணங்கும்படியாகத் திருமேனியைப் பிரதிஷ்டை செய்து கொடுக்க வேண்டுமென்று வேண்டினர். அந்தக் குழுவினருக்கு முதலியாண் டானின் புதல்வரான கந்தாடை ஆண்டான் தலைமை வகித்தார். 'தமர் உகப்பே தம் உகப்பு' என்று இருக்கும் இராமானுசரும் அதற்கு இசைந் தார்.

உடனே ஒரு சிற்பியை வரவழைத்து இராமானுசரைப் போலவே-கொஞ்சமும் வேறுபாடில்லாமல் ஒரு அர்ச்சா விக்கிரகத்தை அமைத்துத் தருமாறு பலரும் வேண்டினர். அச்சிற்பியும் இராமானுசரை வணங்கி அவருடைய திருமேனி அழகை அப்படியே தியானத்தில் தேக்கிச் சில நாட்களில் விக்கிரகத்தைச் செய்து முடித்தார். இராமானுசரும் மிகவும் உகப்புடன் அவ் விக்ரகத்தைத் தழுவி அதில் பிராணப் பிரதிஷ்டையே செய்து விட்டார். இராமானுசருடைய முழுச் சத்தியும் அந்த விக்கிரகத் தில் ஆவாகனம் செய்யப்பட்டது.

இராமானுசருடைய விக்கிரகத்தை ஸ்ரீபெரும்பூதூரில் பிரதிஷ்டை செய்ய நாளும் குறிக்கப்பட்டு விட்டது. ஒரு தை மாதம் புஷ்ய நக்ஷத் திரத்தில் ஸ்ரீ இராமானுசருடைய அர்ச்சாவிக்கிரகம் ஸ்ரீபெரும்பூதூர் ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் கோவிலில், தென்னரங்கனின் பின் அழகைச் சேவிக்கும் வகையில் தெற்கு நோக்கிப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஸ்ரீபெரும்பூதூரில் பிரதிஷ்டை செய்யப்பட்ட அந்நாளில் திருவரங்கத்தி லிருந்த இராமானுசரின் திருமேனியில் தளர்ச்சி ஏற்பட்டது. இப்படித் தான் உகந்து தழுவிய திருமேனியாதலால் அதற்குத் 'தான் உகந்த திரு மேனி' என்று பெயர் வழங்கலாயிற்று.

இது போலவே திருநாராயணபுரத்திலிருந்து மீளும்போது அங் குள்ளவர்கள் மிகவும் வருந்தி வேண்டிக் கொண்டதன் பேரில் அங்கும் ஒரு திருமேனி இராமானுசர் காலத்திலேயே பிரதிஷ்டை செய்யப் பட்டது. அதற்குத் 'தானுன திருமேனி' என்று பெயர்.

இதுபோலவே திருப்பதி-திருமலையில் இராமானுசர் காலத்திலேயே ஒரு திருமேனி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அங்கு இராமானுச ருடைய சீடர்களில் மிகச் சிறந்தவரான அனந்தாழ்வான் என்பவர் திரு வேங்கடவனுக்குத் தொண்டாற்ற நியமிக்கப்பட்டார் என்பது முன்பே அறிந்த செய்தியல்லவா. அவருடைய முயற்சியால் அங்கே பிரதிஷ்டை நடந்தேறியது. இப்படி மிகச் சிறப்பாக மூன்று திவ்ய தேசங்களிலும், நாடாதூராழ்வானல் காஞ்சீபுரத்திலும், மற்றும் பல்வேறு தலங்களிலும் இராமானுசர் காலத்திலேயே திருமேனிகள் அமைக்கப்பட்டு விட்டன. ஆங்காங்குள்ள பக்தர்கள் அத் திருமேனிகளை வழிபட்டு வரலாயினர்.

(அடுத்த இதழில் முற்றும்)

உ

வருக! இராமேஸ்வரம்

இராமேசுவரம் தீவில் அமையப்பெற்றுள்ள அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில் மனம் கவரும் புராதன சிற்பக்கலைக் காட்சிகளுடனும், மிகப்பெரிய பிரகாரங்களையும் கொண்டதாக விளங்குகிறது. இராமாயண வரலாற்றுத் தொடர்பு கொண்டுள்ள இத்தலம் பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்றாக விளங்குவதுடன், வடக்கே காசியும், தெற்கே இராமேசுவரமும் என இந்துக்களுக்குத் தலைசிறந்த இரு பெரிய புண்ணிய தலங்களாகும்.

இத் திருக்கோயிலில் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. சேவார்த்திகள் வசதியாகத் தங்கவும், முறையாக வழிபடவும், இங்கு முக்கிய மாகக் கருதப்படும் இலக்குமண தீர்த்தம், தனுஷ்கோடி, கந்தமாதன பர்வதம் முதலான இடங்களுக்குப் போவதற்கு வசதியும் இக்கோயில் நிர்வாக அதிகாரியை அணுகுவதன் மூலம் அடையலாம்.

இக்கோயிலில் ஸ்ரீ இராமநாதசுவாமிக்கும், ஸ்ரீ பர்வத வர்த்தினி அம்பாளுக்கும் நடைபெறும் கோடி அர்ச்சனையில் சகஸ்ரநாமம் ஒன்றுக்கு ரூ. 10/– வீதம் கட்டணம் செலுத்தி அர்ச்சனை செய்து திருவருள் பிரசாதமும், வெள்ளிக் காசும் பெறலாம்.

இக்கோயிலில் நடைபெற்று வரும் மாபெரும் திருப் பணிக்குத் தாராளமாக நன்கொடை வழங்க வேணுமாய் வேண்டப்படுகிறது. இந்த நன்கொடைக்கு வருமானவரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இராமேசுவரம்,
தமிழ்நாடு.

நிர்வாக அதிகாரி
அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில்.

கடல் கடப்போம்

டாக்டர். அ. மா. பரிமணம், எம்.ஏ., எம்.லிட். பிஎச்.டி.,

'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்பது தமிழ்ப் பழமொழி. இம்மை வாழ்வு செம்மையுறுவதற்கு-அறத்தாற் பொருள் தேடி இன்பந் துய்ப்பதற்குப் பொருளீட்டும் முயற்சியின் அருமையும், இன்றியமை யாமையினையும் வலியுறுத்த எழுந்தது இம் முதுமொழியாகும்.

கடற்பயணம், தரைப்பயணத்தைக் காட்டிலும் துன்பம் மிக்கதாகும். அறிவியலின் பயன்கள் பெருகியிராத பழங்காலத்தில் கடற்பயணம் மனிதனின் அரிய சாதனையாக மதிக்கப்பட்டது. அந்தக் காலத்திலேயே தமிழ் மக்கள் கடற்பயணத்தில் வல்லவர்களாக விளங்கிப் பயன் பெற்றனர். வணிகப் பொருளை ஏற்றிச்சென்று வளர் புகழ் ஈட்டியதோடு, படைகொடு சென்று பாரினை வென்று பலர் புகழ் வாகையும் சூடினர். இம்மை வாழ்வில் எழில் பெற்று இலங்குவதற்கு இயைந்ததோர் வாயிலாகத் திகழ்ந்த கடற்செலவு, மறுமை வாழ்வின் மாட்சியைக் காட்டுவதற்கான உவமையாக-உருவகமாக அருட்சான்றோர்களால் எடுத்தாளப்பட்டு விளக்கம் பெற்றுள்ளது.

கடல் அழகானது; அதனால் 'கண்ணும் நெஞ்சும் கவருகின்ற கடல்' எனக் கவிஞர் வியந்து மகிழ்ந்தனர். அது ஆழம் மிகவுடையது. அதனால் 'நீரினும் ஆரளவின்று' என்று காதலின் ஆழமுடைமைக்கு எடுத்துக் காட்டாகியது. கடல் பரப்பளவில் பெரியது. அதனால் பயன் தூக்கார் செய்த உதவியின் நன்மை அளவினைக் காட்டும் உவமையாக அமைந்துள்ளது. 'பயன் தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் நன்மை கடலிற் பெரிது' என்பது வள்ளுவம். கடல் ஆழமும் அகலமும் கொண்டு, கொந்தளிப்பும் கோட்சுறாவும் மிகுந்து கடக்க முயல்வோர்க்கு எல்லையற்ற தொல்லைகள் தரவல்லது. அதனால் அஃது இன்பக் கரை எய்த விரும்பும் ஆன்மாக்களை உழல்விக்கும் பிறவியை விளக்க உதவும் உருவகமாக வள்ளுவரால் காட்டப்பட்டது. "பிறவிப் பெருங்கடல்" என்பது வள்ளுவர் வாக்கு. அதற்குக் "காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின் பிறவியைப் பெருங் கடலென்றார்" என்பது பரிமேலழகர் தரும் விளக்கம்.

வணிகம் செய்து பொருள் பெறக் கடல் கடக்க விரும்புகிறவனுக்குக் கடலிற்செல்லத்தக்க தோணியும், அத்தோணியைச் செலுத்துவதற்குரிய துடுப்பும் வேண்டும். தோணியில், விலைப்படுத்தும் சரக்கை ஏற்றிக் கடலிற் செல்லும்போது, பாறையில் மோதாமலும், சூறையிற் சிக்காமலும் சென்று கரை ஏறவேண்டும். பாறையில் மோதுண்டும், சூறையால் தாக்குண்டும் தோணி கவிழும் நிலையில் தக்கதோர் பற்றுக்கோடு-புணை கிடைக்காவிடில் தோணியிற் சென்றோன் தவிப்புற்றுத் தண்ணீரில் மூழ்கி இறந்துபடுவான். அவ்வாறே பிறவிக் கடலைக் கடந்து பேரின்பம்

எய்த விரும்பும் ஆன்மாவுக்கும் கடற்பயணத்தின் இடையிலே ஊறு நேர்ந்தால் அழிந்துபடுவது உறுதி. கலம் கவிழ்ந்து, கடலில் மூழ்க விருக்கும் நிலையிலுள்ளவனுக்குப் புணை (தெப்பம்) போல இறைவன் திருவடி துணையாக அமைகின்றது. அழுந்தி இறந்துபட இருக்கும் ஆன்மாவைக் காப்பது ஆண்டவன் திருவடியாகும். அதனால் அந்தத் திருவடிப் புணையினை நல்கும் இறைவனை ஏத்தாது, வாழ்கின்றாயே என நெஞ்சத்தினை இடித்துரைப்பர் அருட்சான்றோர். "வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு, ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே" என்பது திருவாசகம். பவக்கடல் கடக்க உதவும் பெருமானைச் சைவ உலகம் 'தோணியப்பர்' என்றும் போற்றிப் பரவுகின்றது.

கடற் பயணத்தின் இயல்புகள், தொல்லைகள் அத்தொல்லைகளினின்றும் நீங்கும் வழி, அதனால் துன்பம் நீங்கியோர் எய்தும் இன்பம் ஆகிய அனைத்தையும், உய்த்துணரும் வகையில் திருவள்ளுவர், கடவுள் வாழ்த்து என்னும் முதல் அதிகாரத்தின் இறுதியில்,

> பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
> இறைவ னடி சேரா தார்'

எனக் குறளமைத்துள்ளார். வள்ளுவருக்குப் பின் வந்த சமயச் சான்றோர்களிற் பலர், ஆன்மாக்களின் இம்மை வாழ்க்கையினை விளக்குமிடத்து இக்கடற் செலவினை உவமையாகவும், உருவகமாகவும் கொண்டு கூறியுள்ளனர். இவ்வகையில் அப்பரடிகள் செப்பியுள்ள உருவகப்பாடலைக் காண்போம்.

மானிட யாக்கையில் 'மனம்' என்பது வியக்கத்தக்கதோர் அரிய அமைப்பாகும். அந்த மனத்தைக் கொண்டுள்ளமையால் மனிதப் பிறவியே அருமை உடைதாகிறது. 'அரிது அரிது மானுடராதல் அரிது' என்பது ஆன்றோர் முடிவு. பொதுவாக மனம் என்று சொல்லப்படும் அமைப்பின் செயல் நுட்ப வேறுபாடுகளை ஆய்ந்துணர்ந்த பெருமக்கள் அதனை மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என நான்காகப் பகுத்துக் கண்டனர். இவை உடலின் உள்ளே இருப்பதாலும் அறிதற்குக் கருவிகளாக இருத்தலாலும் இவற்றை 'அந்தக்கரணங்கள்' எனச் சைவசாத்திரங்கள் குறிப்பிடுகின்றன. ஒன்றைச் சிந்திப்பது சித்தம். சிந்தித்தவற்றை அவை இத்தகையன, அவை இத்தகையன ஆகுமா அல்லவோ என ஆய்வது மனம். இன்னதெனத் துணிவேன் என்று ஒருப்படுவது அகங்காரம். அது இதுவேயாகும் எனத் துணிவது புத்தி. இந்த அந்தக்கரணங்களின் சிறப்பை பயும், செயலையும் உணர்ந்தே அப்பரடிகள் மனத் தொகைத் திருக்குறுந்தொகை, சித்தத்தொகைத் திருக்குறுந்தொகை, உள்ளத் திருக்குறுந்தொகை, எனப் பதிகங்கள் பாடியுள்ளனர் சிந்திப்பது சித்தமாகலின், அக்குறுந்தொகைப் பதிகத்தைச் 'சிந்திப்பார் மனத்தான் சிவன், எனத் தொடங்கியுள்ளார். அப்பதிகம் வேறெந்தத் தேவாரப் பதிகத்திற்கும் இல்லாத சிறப்பாக முப்பது பாடல்களைக் கொண்டிருக்கின்றது. பாடல்கள் உயிர் வருக்கமாகவும் அமைந்துள்ளன.

ஆற்றல் மிக்க மனம் கடற்செலவிற்கு ஏற்றதான தோணியாகவும் அறிவு தோணியைச் செலுத்த உதவும் துடுப்பாகவும் (கோல்) அமைகின்றன. 'சேர்ந்தாரைக் கொல்லி' என வள்ளுவர் கூறிக் கடியும் சினம், தோணியில் ஏற்றிச் செல்லுதற்குரிய சரக்காக அமைகின்றது. சினச் சரக்கை ஏற்றிய மனத்தோணி, இப்பொழுது வாழ்வெனும் கடல் கடக்கும் பயணத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

'மனமெனும் தோணி பற்றி மதியெனும் கோலை ஊன்றிச்
சினமெனும் சரக்கை ஏற்றிச் செறிகடல் ஓடும் போது'

என்பது அப்பரடிகளின் வாக்கு. ஆன்மாக்களுக்காக-மக்களுக்காகக் கடல் வணிகரைப் போல் நின்று பாடும் அப்பரடிகள் அக்கடற் செலவில் நேரவிருக்கும் ஆபத்தினை முன்கூட்டியே எதிர்பார்த்து, அதனினின்றும் உய்தற்காம் உபாயத்தை அருளுமாறு இறைவனிடம் வேண்டுகின்றார்.

ஐம்புல இன்பங்களுக்கு ஏதுவாகும் மன்மதன் (காமம்) ஆழ்கடலின் அடியில் விளங்கித் தோணியை மோதச் செய்து கவிழ்க்கும் பாறையாகும். கண்களுக்குப் புலப்படாது விளங்கும் மன்மதனுக்கு, நீர்ப்பரப்பிற்குக் கீழே மறைந்து கிடக்கும் பாறை தக்க உருவகமாகின்றது. கட்புலனாகாத பாறை தோணியைக் கவிழ்ப்பது போல, காணாத காமனும் புல இன்பங் காட்டி மனத் தோணியைக் கவிழ்த்து விடுகின்றான். கடற் பயணத்தில் நேரக்கூடிய இத்துன்பத்தினை 'மதனெனும் பாறை தாக்கி மறியும் போது' என்று அடிகள் குறிப்பிடுகின்றார்.

இறைவா, நான் கடலில் பயணம் செய்யும்போது, பாறை தாக்கித் தோணி கவிழ்ந்து கலங்கும் நிலையில் உன்னை நினைக்க முடியாது. அதனால் அந்த நேரத்தில் உன்னை நினைக்கும் உணர்வே என்னைக் காக்கும் தெப்பமாக-புணையாக அமையும். அந்த உணர்வினை எனக்கு அளித்துக் காக்க வேண்டும் என்று இறைவனிடத்தில் வேண்டுகின்றார்.

மதனெனும் பாறை தாக்கி மறியும்போது அறிய ஒண்ணாது
உனைஉனும் உணர்வை நல்காய் ஒற்றியூருடைய கோவே'

என்பது அடிகளின் வேண்டுகோள். புலன்களை வென்ற புனிதராகிய அடிகள் வேண்டுவது, புலன்களால் துன்புற்றுத் தவிக்கும் எண்ணற்ற மக்களின் பொருட்டேயாகும்.

தலங்கள்தோறும் சென்று பதிகம் பாடி அருள் தொண்டு ஆற்றிய அப்பரடிகள் அலைகடலின் அருகே விளங்கும் ஒற்றியூர் இறைவனை ஏத்துகின்றார். சரக்குக்களை ஏற்றிக்கொண்டு கடலில் தோணிகள் செல்லும் காட்சியில் ஈடுபட்ட அடிகள், வாழ்க்கைக் கடலில் செல்லும் தோணிச் செலவையும் இடையே மனக் கண்ணிற் கண்டு அதிலிருந்து நீங்கும் உபாயத்தை இறைவனிடம் வேண்டுகின்றார். மனிதகுலம் ஆன்ம அழிவிலிருந்து மீளுவதற்காம் வழிகாட்டியாக அடிகள் உள்ளத்தில் மலர்ந்த உருவகமலர் வருமாறு :-

'மனமெனும் தோணி பற்றி மதியெனும் கோலை ஊன்றிச்
சினமெனும் சரக்கை ஏற்றிச் செறிகடலோடும் போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போது அறிய வொண்ணாது
உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூருடைய கோவே''

சரக்கேற்றிச் செல்லும்போது, மதனப் பாறை தாக்கித் தோணி, மறிந்து விழுந்த நிலையில் இறைவனை நினைக்க வேண்டிய உணர்வு தருமாறு வேண்டுகின்றார் அப்பரடிகள். இதனை ஒப்பவே, கடலில் விழுந்த ஒருவன் தன்னந்தனியனாகத் தத்தளிக்கும் நிலையில் இறைவன் திருப்பெயராகிய திருவைந்தெழுத்தினைப் பற்றுக்கோடாகக் கொள்ளவே

வளமிக்க கரையினை அடைந்து உய்ந்த தன்மையினைத் தன்மேலேற்றி மாணிக்கவாசகர் திருவாசகம் அருளியுள்ளார். தன்மை வாய்பாட்டில் அமைந்துள்ள அத்திருவாசகப் பாடல் தன்னைப் பயில்வோர் தம்மை அந்தக் கடல் விபத்தில் விழுந்து தத்தளிப்போராக உணரச் செய்து, நெஞ்சை உருக்கி நெகிழ்விக்கும் தன்மை வாய்ந்ததாக விளங்குகின்றது. கடலிற் கவிழ்ந்த நிலையில் ஒருவன் எத்துணைச் செல்வமும் செல்வாக்கும், உற்றாரும் உறவினரும் பெற்றிருந்தாலும் ஒன்றும் இன்றித் தனித்துத் தத்தளிக்கும் நிலையினை முன்னர்க் குறிப்பிட்டு 'தனியனேன்' என்று தொடங்கிச் சித்திரிக்கின்றது அத்திருவாசகம். வாழ்க்கைக் கடலில் ஒவ்வொருவனும் தனியனாகவே தத்தளிக்கின்றான். ஆனால் அவ்வாறு உணராது, அவன் எல்லாரோடும் எல்லாவற்றோடும் கூடியிருப்பதாக உணரச் செய்வது மாயையெனும் மயக்கவுணர்வாகும்.

பிறவி கடலாகவும், தொடரும் துன்பங்கள் அலைகளாகவும், தேன் மொழி மாதர்கள் சூறைக்காற்றாகவும், காமங்கள் சுறு மீன்களாகவும் திருவைந்தெழுத்து புணையாகவும், இறையருள் மல்லற்கரையாகவும் உருவகம் செய்யப் பெற்றுள்ள திருச்சதகப் பாடல் வருமாறு :-

'தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியை நேர் துவர்வாயார் என்னும் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு
இனிஎன்னே உய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை
முனைவனே முதலந்தம் இல்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே'

கடற்பயணத்தில் கலங் கவிழ்ந்த நிலையில் இறைவன் பெயரை நினைக்கும் உணர்வு வேண்டி அப்பரும், தனியனாய்த் தவிக்கும் அந் நிலையில் இறைவன் திருப்பெயராகிய புணையைப் பற்றிக் கரை அடைந்துய்யும் தன்மையை மணிவாசகரும் பாடிய பாடல்கள், மக்கள் அனைவரும் தம் பிறவிக்கடல் கடக்கக் கிடைத்த அருட்புணைகளாகும்.

இறைவன் திருப்பெயர் உணர்வு ஆழும் உயிரை ஆழாமற் காக்க வல்லது என்பது அப்பர் வாக்கின் கருத்து. ஆழ்த்தவல்ல கல்லொடு கட்டிக் கடலில் இட்டாலும் அத்திருப் பெயர் உணர்வு கரைசேர்க்கும் என்பது அவர் தம் வாழ்வின் கருத்து. அடிகளினுடைய வாழ்வும் வாக்கும் இணைந்து விளங்கும் அருட்சான்று,

'கற் றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற் றுணையாவது நமச்சி வாயவே"

என்பதாகும்.

வினை விளைவாக ஏற்படும் விபத்துட்பட்டுப் பிறவிக்கடலில் தவிக்கும் நாம், அருட்குரவர்கள் தம்வாக்காலும், வாழ்வாலும் காட்டிய புணையினை–பற்றுக்கோட்டினைப் பிடித்துக் கடல் கடந்து கரை எய்துவோமாக.

——::——

குன்றக்குடி

அருள்மிகு ஆறுமுகப்பெருமான்

பாமாலை

மரு. பரமகுரு

அயில்வே லெடுத்தானை ஆறு முகத்தானை அன்புவள்ளி
மயல்பட் டிருப்பானைப் பச்சை மயிலிருப் பானை, இன்னும்
அயல்பட் டிருக்கவும் கூடுமோ நெஞ்சே அவனிரு தாள்
வயப்பட் டிருப்பதன் றேவாழ்வு, மற்றென்ன வாழ்விதுவே. (6)

ஓலக் கடலெழுந் தேவரும் செங்கதி ரொத்த எழிற்
கோலத் திருமேனி நீலக் கலாபக் குரிசிலை எக்
காலும் நினைப்பவர்க் இல்லை கவலை கடலெழுந்த
ஆலமுண் டான்சேய் அறுமுகப் பெம்மான் அருள்செயுமே. (7)

குறிஞ்சிக்குத் தெய்வம் குவலயத் தெய்வம் குறைகளினால்
வருஞ் சிக்கல் யாவையும் மாற்றிடுந் தெய்வம் வளர்வினையூத்(று)
உறிஞ்சிக் குடிக்கின்ற வேல் கொண்ட தெய்வம் உயரமரர்
இறைஞ்சும்குன் றக்குடித் தெய்வத்தை வாழத்தின் இடரிலையே. (8)

கண் கண்ட தெய்வம் கலியுகத் தெய்வம் கருணையினால்
புண் கொண்ட நெஞ்சேஇப் போதே இத் தெய்வத்துப் பொன்னடிகள்
பண் கொண்ட பாவினால் பாடிப் பரவுக பாடை கட்டி
மண் கொண் டுனைப்போக வாழ்நாள் கரைந்தது வாய்ப்பிதுவே. (9)

குயில் கூவும் சோலையும் கோலமார் குன்றமும் கொஞ்சு மெழில்
மயில்மீதும் அன்பர் மனத்திலும் வைகி மகிழ்ந்தருளும்
அயில்வேல் முருகனை அப்பனைப் போய் அடை யாமலின்னும்
வயிறே பெரிதென்று வாழ்மன மே என்ன வாழ்விதுவே. (10)

கானக் குறச்சிறு மானைப் பிடிக்கக் கவின் மலர்த்தாள்
ஊனப் படநடந் தோடித் திரிந்த ஒருவனை எம்
மானை மருதா புரிக்குளத் தீர்த்தனை வாய்குளிர
ஈனப் பிறவிப் பிணி நீக்க வேண்டி இறைஞ்சுவனே. (11)

வீர மருது பிளவை நோய் தீர்த்த விறல் மருந்தே
சீரலை வாயிற் குருபரர் நாவைச் செழிக்கவைத்த
பேரருள் போலின்று செந்திற் குமரனைப் பேசுவித்தாய்
ஆறு முகஅப்பா குன்றக் குடியோங்கும் அற்புதமே. (12)

அங்கிங் கெனுத படியெங்கு மான அருட்கடலே
பொங்கி உலகம் தழைக்கப் புறப்பட்ட புண்ணியமே
எங்கட் கிறைவா முருகா குகா எழில் அறுமுகவா
மங்காத குன்றக் குடிவாழும் தெய்வமே வாழ்வருளே (13)

திருப்பரங் குன்றம் திருவே ரகம்திருச் சீரலைவாய்
திருவாவி னன்குடி குன்றுதோ ருடல் திகழ்ந்திடும் மெய்ம்
முருகு, பழமுதிர் சோலை முழுமுதல் மூர்த்தியன்றே
அறுமுகக் கோலமாய்க் குன்றக் குடியில் அமர்ந்ததுவே. (14)

வானுகி மண்நீ வளிநிரு மாகி வயங்கியற்கை
தானுகி நின்று தனியற மாகித் தராதலத்தின்
கோனுகிக் குன்றக் குடிமலை வைகும் குறியது வாய்த்
தேனுகித் தித்திக்கும் செம்பொரு ளேஉனைத் தேறுவனே. (15)

அண்டாண்ட கோடி அனைத்தையும் ஈன்றவோர் அம்மைமுலை
உண்டோங்கி ஞான ஒளிப்பிழம் பான ஒருமுதல்வா
வண்டாடு சோலைசூழ் குன்றக் குடியில் மலர்க்கழல்கள்
கொண்டாடி நின்ற குமரா கடைக்கண் குறித்தருளே. (16)

தண்ணுர் சரவணப் பொய்கை, மருதா புரிதெற்கினில்
ஒண்மலர்க் கண்விழி வையா புரிவடக் கில்கிழக்கில்
சண்முக மாநதி மேற்கில் குளமும் தகழிநெய்யா
விண்முகக் குன்றில் ஒளிர்ந்தது ஞான விளக்கதுவே. (17)

அறுகோண வட்டத் திருவீதி நாப்பண் அழகு மயில்
வரைமீ தறுமுகக் கோலமாய்த் தோன்றுது மந்திரமே
நிறமாறு கொள்பச்சை ஓந்திபோல் வாழ்பவர் நெஞ்சறுப்பாய்
மறவாது நின்தாள் மலர்போற்றும் பேற்றை வழங்குகவே (18)

நீளத் தொடரும் வறுமையை நீக்கி நிறைவருளி
ஆள்க அறுமுகத் தப்பா மருநா புரிக்குளத்து
வாளைமீன் துள்ளி வளர்தெங்கில் பாய மதுப்பொழிந்து
பாளை சிரித்திடும் குன்றக் குடியில் படர்வள்ளலே. (19)

வானுற்றைச் செஞ்சடை வைத்தவன் மைந்தா வணங்கடியார்
ஊனுற்றில் செல்லாமல் உய்விக்க வந்த ஒருதலைவா
மீனுட்டப் பூங்கரத் தார்முதல் நாட்டும் விரிவயல்பாய்
தேனுற்றுப் பாங்கரில் வேல்நாட்டி னுய் அருள் செய்குவையே. (20)

கண்ணப்ப னுக்கருள் காளத்தி யப்பன் கருணைவளர்
அண்ணு மலையாதி னம்சேர்ந் தமைந்த அழகுமலைக்
கண்ணுர்ந் துறையும் கதிரே அறுமுகக் கற்பகமே
பண்ணுர் புகழ்செந் தமிழுக் கருளும் பரஞ்சுடரே (21)

உலகங்கள் ஈன்ற ஒருதாய் நுகரும்; ஒழுகுநறை
மலர்க்கடம் பேசுமக்கும் தமிழ்க் கீரனின் மாணுரைக்குத்
துளங்கிடும் வள்ளி மலரடி தோய்ந்திடும் தோகைமலை
இலங்கும் எம் சண்முக நாதன் திருமுடி ஏத்துமினே ! (22)

ஆயிரம் தண்மதி போலொளி கால்வ(து) அடியவர்க்குத்
தாயினும் சாலப் பரிந்து கனிவது சண்டாளர்முன்
தீயினும் பொங்கிச் சிவப்பது விண் தோய் சிகண்டிமலை
மேயவ ளுகிய ஆறு முகன் எழில் வேள் முகமே. (23)

ஞானப்பா லுண்ட திருச் செவ்வாய் வள்ளி நளினக் கரம்
தேனிற் பிசைந்து தரும்தினை யுண்டது. செஞ்சடையிற்
கூனற் பிறையணிந் தோனுக் குபதேசம் கூறியதே
ஏன் பயம் நாமிருக் கும்போ தெனும் அன்பர் என்பவர்க்கே. (24)

பவளப் பொருப்பிடை வெள்ளிக் கொடியெனப் பாஎிற நூல்
தவள ஒளிர்வது தேன்மொழி வள்ளி தனமழுந்திச்
சுவடு கிடப்பது சொக்கழ காவது தோகைமலை
தவநெறி யாளர்க் கருள்செயும் சண்முகன் தண்ணுரமே. (25)

வேத முதல்வன் தலைகுட் டியது விளங்குமறை
ஓதும் பொழுதில் ஒருவன் முடிமேல் உயர்ந்தது சூர்
சேதப் படவேல் திகழ்ந்தது சேவடி சேர்ந்தவர்க்கு
நீதி வழங்க நிமிர்ந்த தறுமுகன் நீள்கரமே. (26)

மாமறை யாம்கண்டி லோமெனும் மாண்பின வாயவிழ்செந்
தாமரை போல்வன சத்தி மடியில் தவழ்வன நற்
பாமலர் சூடிப் பரிவன குன்றக் குடிப்பதியில்
கோமயி லேறிய ஆறு முகன்றன் குரை கழலே. (27)

மண்ணில் நதியில் கடலில்வா னத்தில் மலையிலெல்லாம்
கண்ணிற் கருத்திற் படும்எழில் யாவையும் கந்தனே நின்
எண்ணற் கரிய வடிவழ கேயென் றினிதுணர்வேன்
வண்ணத் தமிழிறை வாமயில் வெற்பில் வளர்குகனே. (28)

பொன்னழ கோமரைப் பூவழ கோகடல் பூத்தெழுந்த
வன்னக் கதிரின் வடிவழ கோசெம் மணியழகோ
பன்னி யுரைக்கப் படுமோ பவள மலையழகோ
என்னத்தைச் சொல்வேன் இளமுரு காவுன் எழில் நலமே. (29)

(தொடரும்)

சமயபோதனை

பாடம் 13 வினாக்கள் ஏப்ரல் 1975

வினாக்கள் இந்த இதழ்க் கட்டுரைகள் பற்றியனவே ஆகும். விடைகளை முழு அளவு (Foolscape size) இரண்டு தனித் தாள்களில் நான்கு பக்கத்திற்குள் எழுதி இச்செயலகத்திற்கு 30-4-1975க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும். சந்தா எண், பெயர், வயது, முகவரி இவற்றைத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

மதிப்பெண் சமம்] [மதிப்பெண் 100

1. "திரு எவ்வுள் ஊர்" பெயர்க் காரணத்தை விளக்குக.
2. எறிபத்த நாயனாரின் சிறப்பியல்புகளை எடுத்துக் கூறுக?
3. "பெருஞ்செல்வம்" எது? அதனை யார், யாரிடம், எப்படிப் பெற்றுக் கொடுத்தார்கள்?
4. திருமாலுக்குரிய குணங்கள் எத்துணை? என்னென்ன?
5. இராமாவதாரத்தில் உள்ள ஒரு நுட்பமான குறிப்பு என்ன? விளக்குக.
6. "வாத்சல்யம், சுவாமித்துவம், சௌசில்யம்" விளக்குக.
7. குங்கிலியக் கலயரின் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறுக.
8. "தோணியப்பர்" பெயர்க் காரணத்தை விளக்குக.
9. "அந்தக்கரணங்கள்" விளக்குக.
10. "மனமென்னும் தோணிபற்றி" எனத் தொடங்கும் பாடலின் உட்கருத்தென்ன?


விடைகளை எழுதி உரிய அஞ்சல்தலை யொட்டிக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவேண்டும்:—

"அருளோசை"
தமிழ்நாடு தெய்விகப் பேரவை,
9, மகாராஜா சூரியராவ் சாலை,
ஆள்வார்பேட்டை,
சென்னை-600018.



சென்னைக் கடற்கரையில் மழைவேண்டி வேள்வி

கடலில் கலக்கக் குடம் கொண்டு செல்லல்



உ

திருச்சிற்றம்பலம்

திருவருட்பா

(மகாதேவமாலை)

பொற்குன்றே! அகம் புறமும் பொலிந்து நின்ற
    பூரணமே! ஆரணத்துட் பொருளே! என்றும்
கற்கின்றோர்க்(கு) இனிய சுவைக் கரும்பே! தான
    கற்பகமே! கற்பகத் தீங் கனியே! வாய்மைச்
சொற் குன்றா நாவகத்துள் மாறா இன்பம்
    தோற்றுகின்ற திருவருட் சீர்ச் சோதியே! விண்
நிற்கின்ற சுடரே! அச் சுடருள் ஓங்கும்
    நீள் ஒளியே! அவ் ஒளிக்குள் நிறைந்த தேவே!

—திருவருட்பிரகாச வள்ளலார்

திருச்சிற்றம்பலம்

Edited, Printed at Peraval Achakam and Published by A. Narayanaswamy, B. A., for the Tamil Nadu Deivika Peraval at No. 9, Maharaja Surya Rao Road, Alwarpet, Madras-600018.